
# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்



மலர் 42

துந்துபி ஆண்

பங்குனி திங்க

— 83

நான்மறை

தனித்துணை

ஞானத்தி

திருவுருவ

திருஞான சம்பந்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 42 | 10-4-83 | இதழ் 5

## உட்பொருள்



| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | ஆலயங்களின் சொத்துக்கள் ஆன்மீகத்திற்கே! | 207 |
| 2 | தருமைஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... | 212 |
| 3 | ஸ்ரீ மகாமாரியம்மன் அருள் வரலாறு ... | 218 |
| 4 | கடிதம் | 222b, 235 |
| 5 | உபதேசம் பெறலாமே! ... | 222c |
| 6 | அருணகிரிநாதரின் ஆராப்பெருவிருப்பம் | 223 |
| 7 | காளத்திவேடனின் மாசிலா அன்பு! ... | 228 |
| 8 | அப்பர் கண்ட பக்திநெறி ... | 232 |
| 9 | வையத்தை வாழ்விக்கவா! ... | 236 |
| 10 | வேம்பு ... | 237 |
| 11 | எதிர்காலம் ... | 240 |
| 12 | செய்திகள் ... | 247 |



ஸ்ரீ

உ

குருபாதம்

## ...ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வாக்கு

—[★]—

...ன்மார்க்கஞ் செய்யுந்
...தபோதனரோ டென்னையுநீ
...ன்மார்க்கஞ் செய்யவருள்
...நாடுமோ — துன்மார்க்கஞ்
...செய்கின்ற முப்புரத்தைத்
...தீயாக்கித் தென்மதுரை
...வைக்கின்ற சொக்கநா தா.

— சில பிரதிகளில்
காணப்படும் பாடல் 5

ஆசிரியர் :-
வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
**சி. அருணைவடிவேல் முதலியார்**

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 23
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 25
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 125
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 250

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 42 | துந்துபி - பங்குனி - 10—4—83 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— ஞானசம்பந்தர்,

திருச்சிற்றம்பலம்

## ஆலயங்களின் சொத்துக்கள் ஆன்மீகத்திற்கே!

**ஆறுதல் தரும் அறிவிப்பு :**

சென்னையில் 'இந்திய கலாசாரக் கலைவிழா' ஐந்துநாட்கள் அண்மையில் நிகழ்ந்து முடிந்தது. இவ்விழாவினைப் பயனுடையதாகவும் வெற்றிகரமாகவும் தமிழகத்தலைநகரில் நடத்தியவர்கள் காஞ்சி, காமகோடி பீடம் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். இந்துமதத்தைச் சார்ந்த பக்தர்களையும் நம்பிக்கையுள்ள பொது மக்களையும் மற்றும் வியாபாரிகள், தொழிலதிபர்கள் குறிப்பாகச் சொல்லப்போனல் அனைத்துப்பிரிவினரையும் ஒருங்கிணைத்து, மதத்தலைவர்களையும் பங்குகொள்ளச்செய்து விழாவைச் சிறப்பாக நிகழ்த்தியது பாராட்டிற்குரியது. இவ்விழாவின் நிறைவு நாளில் தமிழகமுதலமைச்சர். மாண்புமிகு. எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள்பங்கேற்று, ஆற்றியஉரை ஆன்மிகநாட்டமுடையோர் நெஞ்சங்களில் பால்வார்ப்பதாக அமைந்தது. தமிழர் நாகரிகம்,

கலை, கலாசாரம் மற்றும் பண்பாட்டுவளர்ச்சியில் முதல்வர் அவர் களுக்கு இருக்கும் நாட்டமும், இவற்றிற்குத் தம் வாழ்நாளில் அவர்கள் ஆற்றிவந்திருக்கும் அரும்பணிகளும் நாடறிந்த ஒன்று. ' ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் ' என்ற திருமூலர் வழி வாழ்ந்துவரும் முதல்வர் அவர்கள் பல்வேறு மதத்தினரும் தங்களுக்குள்வேற்றுமைபாராட்டாது, வேற்றுமையுள் ஒற்றுமை கண்டு இணங்கி வாழ வேண்டுமென்ற விருப்புடையவர்கள். முன்னாள் மத்திய அமைச்சர் டாக்டர். கரன்சிங் அவர்களும் பிறரும் பங்கேற்ற இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை ஏப்ரல் 5 ஆம் நாள் மதுரை தினமணி நாளிதழில் வெளி யாகியிருக்கிறது. ஆலய சொத்துக்களை ஆன்மீகத்திற்கே பயன் படுத்த வேண்டுமென்ற முதல்வர் அவர்களின் ஆணித்தரமான பேச்சு நமக்கு ஆறுதலைத்தருகிறது. ஞானசம்பந்தம் முதல்வர் அவர்களின் பண்பு கண்டு மகிழ்கிறது, பாராட்டுகிறது.

## ஆலய சொத்துக்கள் ஆன்மீக வளர்ச்சிக்கே :

மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள் ளன. அவற்றுள் ஒன்று :

> ' குழந்தைகள் இளைஞர்களிடையே இந்திய கலாச் சாரப்பண்பாட்டை வளர்க்க ஆங்காங்கே கேந்திரங் களை அமைக்கவேண்டும் '

இத்தீர்மானத்தை ஆதரித்த முதல்வர் அவர்கள்,

> ' எதிர்கால சமுதாயத்தில் நல்ல பரம்பரையை உரு வாக்கித் தருவதற்கு இதைவிடச் சிறந்தவழி வேறு இல்லை: இந்தக்கேந்திரங்களை அமைக்க அரசுஉதவும் '

எனத் திறந்தமனத்துடன் பேசியிருப்பது மகிழ்ச்சியூட்டுகிறது. வேறு ஒரு தீர்மானம்,

> ' இந்திய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் பரப்பிவரும் கோயில்களின் சொத்துக்கள் ஆன்மீகத் திற்கே பயன்படவேண்டும் '

என்று கேட்டுக்கொள்கிறது. இத்தீர்மானத்தைக் குறிப்பிட்டுப் பேசிய முதல்வர் அவர்கள், இத்தீர்மானத்தைத் தாம் ஆதரிப்ப தாகக் கூறியுள்ளனர். அண்மைக் காலங்களில் பேசப்பட்டு வரும் சில பேச்சுக்கள் மற்றும் சிலரது செயல்களால் வாட்ட

முற்றிருந்த ஆன்மீக நாட்டமுடையவர்களுக்கு முதல்வர் அவர்களின் உறுதிமொழி பெரிதும் ஆறுதல் தருவதாக அமைவதில் வியப்பில்லை.

## குறைநீக்கிக் காக்க விரும்பும் குணமாண்பு :

இந்துசமய அறநிலையத்துறையும், இதன் ஆளுகைக்கு உட்பட்ட பல்லாயிரம் ஆலயங்களும், அவற்றின் சொத்துக்களும், இவற்றை அமைத்து, வழங்கியவர்களின் நோக்கங்களுக்கு முரணாக அமைதல் கூடாது என்பதில் முதல்வர் அவர்களுக்கு இருக்கும் நாட்டம் அவர்கள் உரையில் தெளிவாக விளங்குகிறது. இதுபற்றித் தினமணி கூறும் செய்தி:

> ' அறநிலையத்துறையை முதலில் தாமே வைத்துக் கொண்டிருந்ததாகவும், ஆலயங்களைப் பார்வையிடச் செல்லும்போது தம்மைப் பார்க்கக் கூட்டம் கூடிவிடுகிறது என்பதால், அமைச்சர் வீரப்பனிடம் அந்தத் துறையைக் கொடுத்திருப்பதாகவும் கூறிய அவர், அந்தத் துறையில் ஏதேனும் குறை ஏற்பட்டால் மீண்டும் தாமே அதை எடுத்துக்கொள்ளுவதாகவும் தெரிவித்தார் '

என இவ்வாறு அமைகிறது. பிறரிடம் இத்துறையை வழங்க விரும்பாத முதல்வர் அவர்களின் நெஞ்சப்பாங்கு, அறநிலையச் சொத்துக்களில் முறைகேடுகள்புகுந்துவிடலாகாதுஎன்ற அவர்களது நல்லெண்ணத்திற்குச் சான்றாகிறது. அறநிலையச் சொத்துக்களின் உரியவருவாய், தட்டின்றிக் கிடைக்கவும், அவ்வருவாய் ஆலய வளர்ச்சிக்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் பயன்படவும் முதல்வர் அவர்களின் பேச்சு வழிவகுக்கும் என ஞான சம்பந்தம் பெரிதும் எதிர்ப்பார்க்கிறது. முதல்வர் அவர்களின் அன்புக்குரிய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், முதல்வர் அவர்களின் எண்ணம் ஈடேறத் தொடர்ந்து பாடுபடுவார்கள் என்று நாம் எண்ணிமகிழ இக்கலைவிழா வழிவகுத்திருக்கிறது.

## வேற்றுமையில் ஒற்றுமை உண்டு, பகை இல்லை !

கலைவிழாவில் உரையாற்றிய முதல்வர் அவர்கள் இந்துக்களிடையே மேலும் ஒற்றுமை வேண்டும் என்பதனையும், இவர்களை வழிநடத்திச் செல்லும் மடாதிபதிகளிடையே நல்லிணக்கம் நிலவ வேண்டுவது இன்றியமையாததெனவும், மதத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கி, அதனைக் காத்தால்,

அரசு தனது ஒத்துழைப்பினை நல்கும் எனவும் திறந்த மனத்துடன் கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள். இவ்விழாவில் பங்கேற்று அருளுரை வழங்கிய காஞ்சி காமகோடி பீடம் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்,

> 'இந்துமதத்தைப் பண பலத்தினாலோ, அதிகார பலத்தினாலோ வளர்க்க இயலாது; ஆன்மீக பலத்தின் மூலம்தான் வளர்க்க முடியும்; இந்து மதத்தில் பிரச்சனைகள் வரும்போதுதான் எல்லோரும் ஒன்றுபடுகிறார்கள்; மற்ற நேரங்களில் ஈடுபாடு காட்டுவதில்லை என்பதைக்கொண்டு வேற்றுமைஇருப்பதாகநினைக்கக் கூடாது'

என்று கூறியிருத்தல் சிந்திக்கத்தக்கது. வேதத்தை உடன்படும் வைதிகமதங்கள் பலவும் இந்துமதம் என்ற பொதுக்குறியீட்டில் அமைகின்றன. சைவம், வைஷ்ணவம் போன்றன வழிபாட்டு நெறிமுறைகளால் வித்தியாசப்பட்டாலும் ஒன்றற்கொன்று பகைப்பதில்லை. ஒட்டுமொத்தமான புற அழிவுச் சக்திகள் தாக்கும்போது இவை ஒருங்கிணைந்து நிற்பதை சுவாமிகள் சுட்டிக்காட்டியிருப்பது உள்ளதை உள்ளபடியே எடுத்துக் காட்டுவதாயுள்ளது.

## ஆன்ம இணக்கத்திற்கு அறைகூவல்!

பொதுவாகச் சட்டங்கள் மனிதனின் புறவாழ்வில் மாற்றங்களைவிளைவிக்கின்றன. சமயங்கள் அகவாழ்வில் மாற்றங்களை விளைவிக்க முயல்கின்றன. முதல்வர் அவர்கள் தம் உரையில்,

> 'நமக்குள் ஏற்றத்தாழ்வு இல்லை என்பதை அலுவலகத்தில் காட்டினால்மட்டும் போதாது; ஆன்மாவில் காட்டவேண்டும்; அப்படிப்பட்ட நிலை உருவானால் தமிழக மக்கள் எந்தக் கட்டளை இட்டாலும் நிறைவேற்றத் தமிழக அரசு தயாராக இருக்கிறது'

எனக் குறித்துள்ளமை நமது சிந்தனையைத் தூண்டுகின்றது. மனிதர்களிடையே, மனப்பூர்வமான நல்லிணக்கம் நிலவ இந்து மதம் உதவவேண்டுமென்பதையே முதல்வர் அவர்களின் இவ்வுரைக் குறிப்பதாகக் கொள்வதில் கருத்துவேறுபாடு இருக்க இயலாது. இந்துமதம் – குறிப்பாகச் சைவம் இவ்வகையில் ஆற்றிவந்திருக்கும் மாபெரும் பணிகளை உலகம் நன்கு அறியும். சமய வரலாறும் – சமயச் சான்றோர்கள் வரலாறும் உள்ளார்ந்த மனித நேயத்தைச் சிறப்பித்தே வந்துள்ளன. தமிழ் நாட்டில்

கடந்த நானூருண்டுக் காலத்தில் புதிதாக வந்து புகுந்த மதங்களிடமும் – மதஞ்சார்ந்த மக்களிடமும் இந்துமதம் காட்டி வந்திருக்கும் பொறுமையும் பண்பாடும் முதல்வர் அவர்களுக்குத் தெரியாததன்று. மேலும், இவ்வகையில் இந்துமதம் பங்குபணியாற்ற வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்ப்பதில் தடையில்லை. இவ்விழாவில் பேசிய டாக்டர். கரன்சிங் அவர்கள் கூறிய சில கருத்துக்கள் இங்கே சிந்திக்கத்தக்கன.

'இந்திய கலாச்சாரத்திற்கு அன்னியர்களால் ஆபத்து ஏற்பட்டபோதெல்லாம் அதைக்காப்பாற்றிய பெருமை தென்னுட்டிற்கே உரியது; இதில் தமிழ் நாட்டிற்குச் சிறப்பாக இடம் உண்டு. மேலும் அவர் பேசுகையில்,

> "ஹிந்துமதம் வேறு எந்த மதத்திற்கும் எதிரி அல்ல; இதே அணுகு முறையைப் பிறமதத்தினரிடமிருந்தும் இந்துமதம் எதிர்பார்க்கிறது"

என்றும் கூறியுள்ளார். மனப்பூர்வமான இணக்கம் இந்துக்களால் மட்டும் இயல்வதன்று. பிறமதத்தினரும் இவ்வுணர்வினைக்கடைப்பிடிக்கவேண்டும் என்றகூற்று முறையானதாகவே அமைகிறது.

**பணிதொடர்வோம், பகைதணிப்போம் ;**

எங்ஙனமாயினும் தமிழகமுதல்வர் அவர்கள் கலை கலாச்சார வளர்ச்சியில் இந்து மதம் ஆற்றிவந்திருக்கும் பணிகளைக் குறைத்து மதிப்பிடவில்லை என்பது புலனுகிறது. மேலும் இவ்வகையில் இந்துமதம்பங்காற்ற அவர்கள்விடுக்கும் அழைப்பை ஏற்பது நமது கடமையாகிறது. இவ்வகையான முயற்சி மேற்கொள்ளும் இந்துமத திருவனங்களை உரியவாறு பாதுகாப்பதில் முதல்வர் அவர்களுக்கு இருக்கும் நல்லெண்ணம் மகிழ்வூட்டுகின்றது. ஆலய சொத்துக்கள் ஆன்மீக வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட முதல்வர் அவர்களின் நல்லெண்ணம் தொடர்ந்து ஒளியூட்டி, வழிகாட்டும் என ஞானசம்பந்தம் பெரிதும் எதிர்பார்க்கிறது. இந்து மக்களும் – இந்து சமயப் பெரியோர்களும் மேலும் இணைந்துநின்று சமூக இணக்கத்தையும் – சமூக நல்லுணர்வுகளையும் போற்றிப் பாதுகாக்க உறுதிபூண்பார்களாக!

ஆலயச் சொத்து ஆன்மீகத்திற்கே பயன்படுவதாக.

ஆன்மநேய ஒருமைப்பாடு அகிலமெலாம் பரவுக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

**திருநெல்லிக்காவல் அருள்மிகு மங்களாம்பிகை உடனாகிய அருள்மிகு நெல்லிவனநாதர் திருக்கோயில்**

குடமுழுக்கு விழாவினை ஒட்டி, முதல்நாள், சுவாமி அம்பாளுக்கு மருந்துசாத்தி வழிபாடு நிகழ்த்தி அன்பர்களுக்கு வழங்கியருளிய

# ஆசியுரை

30—3—1983

" கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே "

(அப்பர்)

**எங்கும் நிறைந்த இறைவன் :**

கனியில் சுவையாய் இருப்பவனும், கற்கண்டில் இனிப்பாய் இருப்பவனும், பாவை நல்லாரிடத்தே இன்பாய்த் திகழ்பவனும், ஆட்சிபுரியும் அரசில் இனிதாய்த் திகழ்பவனும். இறைவனே ஆவான். இக்கருத்தை உணரவேண்டுமானல் மனித இனம் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். எல்லா இடத்திலும் இறைவன் இருக்கின்றான். இதனையே தாயுமானவர்,

" அங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி "

என்று குறிப்பிடுகிறார்.

" ஒன்று நீ யல்லை; உன்னையன்றி ஒருபொருளு மில்லை என்று மாணிக்கவாசகரும் குறிக்கின்றார்.

'கரந்து எங்கும் பரந்துளன்' என்பது நம்மாழ்வார் பாசுரம் உண்ணும் சோற்றில் உணவு ஆகவும், பருகும் நீரில் சுவையமுதாகவும், தின்னும்வெற்றிலையில் ஜீரணசக்தியாகவும், இவை எல்லாமாகவும் திகழ்பவன் அவன் என்பதை,

" உண்ணும்சோறு பருகும்நீர் தின்னும்வெற்றிலை யும்எல்லாம்
கண்ணன்எம் பெருமான் என்றென்றே கண்கள் நீர்மல்கி
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக்கவன் ஊர்வினவித்
திண்ணம்என் இளமான் புகுமூர்திருக் கோளூரே "

என்ற ஏழாவது திருவாய்மொழியில் முதல் பாசுரத்தில் நம்மாழ்வார் குறிப்பிடுகின்றார்.

இவற்றையெல்லாம் உள்ளடக்கியே நம்மால் வணங்கப் பெறும் பரம்பொருளை நம்முன்னோர் ' இறைவன் ' என்று குறித்தனர். இறை என்றசொல் செறிவு, நிறைவு எனப்பொருள்படும். அப்படி எங்கும் நிறைந்திருக்கின்ற பொருள் சராசரி மனிதனுக்குப் புலப்படாது; சான்றோனுக்குத் திகழ்பவனுக்குப் புலப்படும் என்ற பொருளில் ' கடவுள் ' என்ற சொல்லட்சி அமைந்திருக்கின்றது. கட + உள் = கடவுள். கட என்ற சொல் கடந்தது என்பதையும் உள் என்றசொல் உள்ளத்தே உள்ளது என்பதையும் உணர்த்தும்.

## கடந்தவன் கடவுள் :

மனிதன் படுகின்ற துன்ப இன்பங்களைக் கடந்தவன் கடவுள் என்பதைக் கட என்ற பகுதிச்சொல் நமக்கு உணர்த்துகின்றது. இதனை,

" துன்பமொடு இன்பம தெல்லாம் கடந்தவர்
காதலில் வாழும் கற்குடி மாமலை யாரே "

என்று திருக்கற்குடிப் பதிகத்தில் ஞானசம்பந்தர் அருளிச் செய்கின்றார். கடந்து நின்றமையால் நாட்டுக்கு யாது பயன் என்று கேட்பார்க்கு விடையாக நம்உள்ளத்துளே இருக்கிறார் கடவுள், என்பதை உள் என்ற விகுதி விளக்குகிறது.

## உள்ளத்தில் உளன் :

அறியாமையாலும் அழுக்கினாலும் சராசரி மனிதன் இறைவனை அறியாமல் இருக்கிறான்; இறைவன் நம்முள் மறைந்

திருக்கின்ருன். இதனுலேயே ஞானசம்பந்தர் இறைவனைக் 'கள்வன்' என்று குறிக்கிருர்.

"உள்குவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்து அறிதி"

என்று அப்பரும் இக்கருத்தை வெளியிடுகிருர்.

அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும் தொழும்பர் உளக்கோயிலில் வீற்றிருப்பான் இறைவன். எல்லாருடைய உள்ளத்திலும் வீற்றிருந்து அருளுகிருர் இறைவன் என்ருலும் ஞானியரின் தூய உள்ளத்தில் இருப்பதை விளக்கமாகக் காணலாம்.

"தேடித் தேடொணுத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என்பதும்

"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"

என்பதும் அப்பர் சுவாமிகள் அருள்வாக்கு.

மேலும் கடவுளைத் தமிழ்ச் சான்ருேர் 'இயவுள்' என்றும் போற்றியுள்ளனர். இயவை என்ருல் வழி. வழியாகவும் வழி நடத்துவோனுகவும் இருப்பவன் இறைவன் என்பதை இச் சொல் நமக்கு உணர்த்துகிறது. "பெரும் பெயர் இயவுள்" என்பது திருமுருகாற்றுப்படை. எனவே, எங்கும் நிறைந்தவன் இறைவன் என்றும் ஒருவகையில் கடந்தும் ஒருவகையில் உள்ளத்தில் மறைந்தும் இருப்பவன் கடவுள்என்றும், இயங்கி யும் இயக்கியும் வருவோன் இயவுள் என்றும் அறிந்தும் அனுபவித்தும் வந்தவர்கள் நம் முன்னேர்கள்.

## உயிரை வளர்ப்பனவே திருக்கோயில்கள் :

வானமண்டலத்தில் மின்சாரம் பரவிநிற்கிறது. அந்த மின் ஆற்றலை மனிதவாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ளமின்சார நிலையங்கள் தேவைப்படுகின்றன.

பூமிக்கு அடியில் நீர் நிரம்பிப் பரவிக்கிடக்கின்றது. அந்த நீரைப் பயன்படுத்தி நம் அனுபவத்திற்கு கொண்டுவர வேண்டு மானுல் கிணறு தோண்டிப் பயன்படுத்துகிரேம்; தற்காலத்தில் குழாய்க் கிணறுகள் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் மூலம் தண்ணீரை அனுபவத்திற்குக் கொணர்கிரேம்.

அடுத்து உயிர்ச்சத்துள்ள பால் தேவை என்றால் அதற்குப் பசுவைவளர்த்து அதன்மடியிலிருந்துபால்பெறுகிறோம். பசுவின் உடல் முழுவதும் பால் சத்து இருப்பினும் மடிவழியாகத்தான் பெறமுடிகிறது.

இவற்றுக்கெல்லாம் நம் முயற்சியும், உழைப்பும், பொருட் செலவும், காலமும் எவ்வளவு தேவை என்பதை நம்மில் பலர் அறிவோம். இதே போலத்தான் கடவுளை, அறிந்து அனுபவிக்க வேண்டுமென்றால் முயற்சி, பொருட்செலவு, உழைப்பு, காலம் என்பன மிகமிகத் தேவை. இவற்றுள் எந்த வழியிலே நாம் ஈடுபடுகிறோம் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும்.

நீர், பால், மின்சாரம் இவற்றால் எல்லாம் நாம் பெறுவது உடல்வளர்ச்சியே; உடல்வளர்ச்சி உயிரைவளர்ப்பதற்காகவே என்பதை நம்மில் பலர் உணர்வதில்லை. வீடு எதற்காகக் கட்டுகிறோம் என்றால் நாம் வாழ்வதற்காக, என்று புரிந்து கொள்கிறோம். வீட்டுக்காக மனிதன் இல்லை, மனிதனுக்காக வீடு. இவ்வாறு பல உதாரணங்கள் தரலாம். உயிர்வளர்ச்சிக் காகவே உடல்வளர்ச்சி என்பதைத்திருமூலர்

" உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே "

என்று விளக்குகிறார்.

உடலுக்காக உயிர் இல்லை; உயிருக்காகவே உடல் என்பதை ஏனோ புரிந்துகொள்ளாமலே வாழ்ந்து வருகின்றோம். உயிரை வளர்க்க எழுந்தவையே திருக்கோயில்கள்.

## திருக்கோயில்களின் ஆற்றல் :

ஆன்மீக ஆற்றலை உயிர்களிடத்தே வளர்த்து இறை யுணர்வை-ஆன்ம அனுபவத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக அமைந்தவை கோயில்கள். மின் ஆற்றலைப் பெறவும் பெருக்க வும் மின் நிலையங்கள் அமைந்துள்ளன; நீரினைப்பெறக் கிணறு முதலியன உதவுகின்றன. ஆன்மீக ஆற்றலைப் பெறத் திருக்கோயில்கள் அமைந்துள்ளன. திருக்கோயில்கள் மனித னிடத்தே தெய்வ சக்தியைப் பெருக்கி வாழ்வாங்கு வாழ வழி வகுக்கின்றன.

மின்நிலையத்தில் அதிகாரிகள், அலுவலர்கள், தொழிலாளர்கள் இடைவிடாதுபணியாற்றுவதுபோல, தருமகர்த்தாக்கள் அருச்சகர்கள், அலுவலர்கள் திருக்கோயில் பணிகளை ஒழுங்காகச் செய்தால், தெய்விக, ஆன்மீக நெறிபரவி எல்லோரும் எவ்வுயிரும் இன்புற்றிருக்கப் பெருந்துணை புரிவதாகும்.

மின்நிலையம் போன்றவற்றில் சேவை தடைப்படுமானால் உடனடியாகப்பலன் தெரிந்துவிடும். திருக்கோயில்களில் பணி தடைப்படுமானால் நாளடைவில் தான் காலப்போக்கில் தான் தெரியும். மின் ஆற்றல்போன்றவை அறிவற்ற ஆற்றல்;ஜடசக்தி. திருக்கோயில்களில் இறைஆற்றல் முற்றறிவுடையது. எனவே, நன்மை வருவதும் தீமைவருவதும் நம்முடைய தரமறிந்து இறைவன் காலப்போக்கில் கொடுப்பான்

## பயன்களைப் பெறுவோம் :

திருக்கோயில்களின் ஆற்றல் கண்ணுக்குப் புலனாவதில்லை என்பதால் அலட்சியம் செய்துவிடக்கூடாது. உலகியல் பொருள்கள் நேர்முகப் பலன்தரும். இறையியல் மறைமுகப் பலன்தருவது.

தாவரம் - நேர்முக மறைமுகப் பலன் தருவதுண்டு. நேர்முகப்பலனைத்தருவதை அனைவரும் அறிவர்; மறைமுகப்பலன் சிலருக்கே தெரியும். ஒருமரம் காய், கனி, தளிர், இலை முதலிய பயன்களைத் தருகிறது: பெருமரங்கள் கட்டில்கால் முதலியன வற்றைத்தருகிறது. மரம் தரும் பலனாக இவற்றைமட்டும் கருதினால் போதுமா? இவைகள் காட்சிக்குத் தெரிவன. கண்ணுக்குத் தெரியாத சில பயன்களும் உண்டு. ஒருமனிதன் அன்றாடம் சுவாசிக்கும் பிராண வாயுவுக்கு மரமல்லவா உதவுகிறது! ஒரு மனிதன் சுவாசிக்கத் தேவையான பிராணவாயுவைத்தர 16 மரங்கள் தேவைஎன ஆய்வறிஞர் குறிப்பிட்டுள்ளனர். மரங்கள் அல்லனவற்றை ஏற்று நமக்கு நன்மைசெய்கின்றன. அவை, நாம் விடும் கரியமலவாயுவை உட்கொள்கின்றன. பிராணவாயுவாகிய நல்லகாற்றை நமக்குச் சுவாசிக்கத்தருவது மறைமுகப் பயன். ஆற்றங்கரையின் ஓரத்தில் இருக்கிற மரங்கள் தண்ணீர் ஆவி ஆகாதவாறு தடுத்து உதவுகின்றன. 'ஒலியைக் கட்டுப்படுத்துவதும் மரம், செடி, கொடிகளே' என்று ஆய்வறிஞர் அறிவிக்கின்றனர். இப்படி மறைமுக, நேர்முகப் பலன்களை மரங்கள் தருகின்றன.

பெற்ரேர்பிள்ளைகட்குச் செய்கின்ற பலன்களை நன்மைகளைப் பிள்ளைகள்புரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர். கடவுள் மறைமுகப் பலன்களையே நமக்குத் தருகிருர். நாம் அவற்றை உணர்வதில்லை. எனவே, திருக்கோயில் வழிபாடு நம்முடைய அன்ருட வாழ்வியல் முன்னேற்றத்துக்கும் ஆன்மீகமுன்னேற்றத்துக்கும் வாழ்வாங்கு வாழ்ந்து வளம் பெறுதற்கும் பெருந்துணை புரிவன.

**மாரி பொழியும் :**

திருக்கோயில்களைச் சுண்ணம் பூசி, வண்ணம் தீட்டிப் பழுது பார்த்துப் புதுப்பித்தும் சிலா வடிவங்கள், செப்புப்படிமங்கள் என்னும் இவற்றைச் செம்மையாகப் பாதுகாத்தும்நாள் தோறும் கோயில்களில் மக்கள் வசதிக்கு ஏற்ப 2 காலம் அல்லது 4 காலம் அல்லது 6 காலம் பூசைகளை இடைவிடாது நடத்தியும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் அஷ்டபந்தன மருந்துசாத்தி, வேதாகம முறைப்படி குடமுழுக்கும் பூசைகளும் ஆற்றியும் வருவோமாளுல் மாதம் மும்மாரி பொழியும் என்பதில் ஐயமில்லை; மாதம் மும்மாரி இல்லை என்ருலும் ஒருமாரியேனும் பொழியும்; நாடும் வீடும் சிறக்கும்; நலம் பெருக்கும்.

அருள்மிகு மங்களாம்பிகை உடனுகிய அருள்மிகு நெல்லிவனநார்த் திருக்கோயிலில் இன்றுமருந்து சாத்தப்பெற்றுள்ளது. நாளை நடைபெறும் குடமுழுக்கு விழாவில் அன்பர்கள் அனைவரும் தம்மால் இயன்றபணிகளைச் செய்து வணங்கி வழிபட்டுப் பயன் பெறுவார்களாக. குடமுழுக்குவிழா இனிதே நிகழப் புண்ணியப் பணிிற் பங்குபெறும் அன்பர்களும் பிறரும் நலம் பல பெற்று நீடுவாழ எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

இறைநெறிபோற்றி இன்பம்பெறுக.

# ஸ்ரீ மகாமாரியம்மன் அருள் வரலாறு

## ஆகமப்ரவீண, திரு. V. முத்துசாமி குருக்கள்.

கருணையேவடிவான பராசக்தி, விண்ணுலகத்தேவரையும் மண்ணுலகத்தவரையும் அவ்வப்பொழுது தோன்றும் பல இன்னல்களிலிருந்து, காத்தருளும்பொருட்டு எடுத்தபல அவதாரங்களில் கிராமதேவதைகளாகிய வெவ்வேறான நான்கு திரு அவதாரங்களே ஸ்ரீ சீதளாதேவி, ஸ்ரீ மகாமாரி, ஸ்ரீ கருமாரி, ஸ்ரீ ரேணுகாதேவி என்பன.

### 1. சீதளாதேவி

கந்தபுராணத்தில் ஸ்ரீ சீதளாதேவியின் அருள் வரலாறு பின்வருமாறு கூறப்பெற்றுள்ளது.

அசுரர்களின் ஆட்சிக்காலங்களில் தர்மம் குன்றியது' அதர்மம் மேலோங்கியது, பின் தெய்விக சக்திகளும் தேவர்களும் அசுரர்களை அழித்தும் ஒடுக்கியும் பாதாள உலகிற்கு அனுப்பினர். இதனால் அசுரர்கள் வருத்தமுற்றனர்; தேவர்களை ஒடுக்க வகை தெரியாமல் திகைத்தனர். தமது குலகுருவான சுக்கிராசாரியாரிடம் சென்று முறையிட்டனர். சுக்கிராசாரியாரும் தேவர்களை ஒடுக்க எண்ணி, ஓர் ஆபிசார ஹோமம் செய்தார். ஹோமத்தின் விளைவாகத் தேவர்களின் சரீரமெங்கும் கொப்புளங்கள் உண்டாகி, வெப்புநோய் தோன்றி மிகவும் அவதிப்பட்டனர். துன்பம் தாங்கமுடியாத தேவர்கள் ஈசுவரனை நோக்கிக்கடுந்தவம் புரிந்தனர். ஈசனும் அவர்கள்முன்தோன்றி. 'யாது வரம் வேண்டும்?' எனக்கேட்டார். தேவர்கள் தாம் அடைந்த துன்பத்தினை எடுத்துக் கூறிக் காத்தருளுமாறு வேண்டினர்,

தேவர்களுக்கு அருளத் திருவுளம்கொண்ட இறைவன் தமது சடையிலுள்ள சந்திரனிடத்திருந்தும், கங்கையிலிருந்தும் மாயா சக்தியைக் கொண்டு சிவந்தமேனியளாக, நான்கு கரங்கள் உடையவளாக, கரங்களில் கத்தி, கபாலம், உடுக்கை' பாசம் என்னும் இவைகளை ஏந்தியவளாய், ஜ்வாலா கேசம் உடையவளாய், ஐந்தலை நாகம் குடைபிடிக்கப் படுபவளாய், தேவியைத் தோற்றுவித்து, தேவியின் கரங்களில் ஒருகரகத்தில் (கும்பத்தில்) குளிர்ந்தநீரும் வேப்பிலையும் பிரம்பும் கொடுத்துத் தேவர்களைக் காக்குமாறு உத்தரவிட்டு மறைந்தார்.

குளிர்ந்த சந்திரனிடமிருந்தும், கங்கையிலிருந்தும் தோற்றம் பெற்றமையால் அந்தச் சக்தியை, சீதளாதேவி – குளிர்ந்த

தன்மையுள்ளதேவி—என வழங்குவர். சீதளாதேவிதம்கரகத்தில் உள்ள நீரை வேப்பிலையால் எடுத்துத் தேவர்கள்மேல் தெளித்துப் பிரம்பினால் தடவித் தேவர்களின் கொப்புளங்களையும் நோயையும் நீக்கினாள்; தேவர்கள் சுகம் பெற்றனர்.

சீதளாம்பிகை மக்களிடத்தில் தவறுகள் அதிகரிக்கும் பொழுது, கொப்புளங்களையும் வெப்பு நோயையும் கொடுத்து மக்களைத்திருத்த முற்படுகின்றாள். இந்நோயை 'வைசூரி' என்பர். மேற்கூறிய வரலாற்றை ஒட்டியே வைசூரி கண்டால் வேப்பிலையுடனும், பிரம்புடனும் கரகம் எடுத்து சீதளாம்பிகையை ஆராதித்து வைசூரியிலிருந்து குணம் பெறுகின்றனர். இந்நோய்க்கு உலகில் மருந்து எதுவும் இல்லை. மேனாட்டவரும் இந்நோயை மருந்தற்றநோய் (Fatal Discase) என்பர். இந்நோய் மருத்துவ சிகிச்சைக்கு அடங்குவது இல்லை.

## 2. மகாமாரி

சுக்கிராசாரியார் தமது சீடர்களாகிய அரக்கர்கள் படும் தோல்வியைக் கண்டு பொறுக்காதவராய் மீண்டும் ஆபிசார ஹோமம் செய்தார். ஹோம அக்னியிலிருந்து அதிபயங்கரமான உருவமும் செயலாற்றலுமுள்ள ஓர் அசுரன் தோன்றினான். அவ்வசுரன் தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் மாரணம் செய்தமையால் மாராசுரன் என்ற பெயர் அவனுக்கு உண்டாயிற்று. மாராசுரனது கொடுமை தாங்காத தேவர்கள் அம்பிகையைப் பலவாறாகத் தோத்தரித்துப் பிரார்த்தித்தனர். தேவர்களின் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து மாராசுரனைச் சம்ஹரிக்கும் பொருட்டுச் சிவந்த மேனியும், நான்குகைகளும், அக்கைகளில் கத்தி, கபாலம், உடுக்கை, சூலம்ஏந்தி, ஐந்து தலைநாகம் குடை பிடிக்க விளங்கினாள். மாராசுரனுடன் கடும்போர்செய்து அவனைச்சம்ஹாரம் செய்தாள். மாராசுரனைச் சம்ஹரித்தமையால் மகாமாரி என்ற திருநாமம் உண்டாயிற்று.

இதே வரலாறு காரணாகமத்திலும் மகாமாரி பிரதிஷ்டா விதி படலத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அஃதாவது

மாராசுரேண பலினா பீடிதேச ஜகத்ரயே I
மாராசுர வதம் பூர்வம் மஹா மாரீதி நாமத: II

(கருத்துரை : பலசாலியான மாராசுரனால் மூவுலகமும் துன்புறுத்தப்பட்டபொழுது அம்மாராசுரனைச் சம்ஹரித்த தேவிக்கு மஹாமாரி என்ற திருநாமம் ஏற்பட்டது)

தேவீ மகாத்மியத்திலும் தேவியே மகாமாரி என்று பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக அவற்றுள் மூன்று எடுத்துக்காட்டுக்களை இங்குக் காணலாம்.

1. தேவீ மகாத்மியம் 12 ஆவது அத்தியாயம் 38 ஆவது சுலோகத்தில் கூறப்பட்டுள்ளதாவது :-

மகாகாள்யா மகாலே மகாமாரீ ஸ்வரூபயா I
ஸைவ காலே மகாமாரீ ஸைவ ஸ்ருஷ்ஷர் பவத்யஜா II

(கருததுரை : கல்ப ஆரம்பத்தில் மகாகாளியான தேவி மகாமாரியின் உருவில் உலகத்தைச் சிருஷ்டிக்கத் தொடங்குகின்ருள்)

2. தேவீ மகாத்மியம் பிராதாணிகர் கஸ்யத்தில் 12 ஆவது சுலோகத்தில் கூறப்பட்டுள்ளதாவது :-

யாநி கர்மாணி தானிதே I
மகாமாயா மகாகாளீ மகாமாரீ க்ஷுதா த்ருஷா II

(கருத்துரை: தேவி எவ்வெப்பொழுது எவ்வெக்காரியங்களில் ஈடுபடுகின்ருளோ அவ்வப்பொழுது அவ்வச்செயல்களை அனுசரித்து மகாமாயை, மகாமாரி, க்ஷீதை (பசியின் உருவமானவள்) த்ருஷை (ஆசையின் உருவானவள்) என்ற பெயர்கள் உண்டாகும். )

3. தேவீ மகாத்மியம் மூர்த்தி ரகஸ்யத்தில் 20 ஆவது சுலோகத்தில் கூறப்பட்டுள்ளதாவது :-

சித்ரானு லேபநாதே வீ சித்ராபரண பூஷிதா I
சித் ரப் ப்ரமர பாணி: ஸா மகாமாரீதி கீயதே II

(கருத்துரை: மகாமாரி அழகிய மேற்பூச்சும், அழகிய ஆபரணங்களுடன் கூடிய அலங்காரமும் அழகிய கைகளும் உடையவள் என்று போற்றப்படுகின்ருள். )

சீதளையைச் சின்ன மாரியம்மன் எனவும், மகாமாரியைப் பெரியமாரியம்மன் என்றும் வழங்கிவழிபடுவது உலகவழக்காக உள்ளது.

ஆக்னேயபுராணத்திலும்மகாமாரிபற்றிக்கூறப்பட்டுள்ளது முன்காலங்களில் அரசர்கள் தங்கள் பகைவர்களை வெல்வதற்கு அதர்வண வேதத்தில் கூறியுள்ளவாறு ஆபிசார ஹோமத்தினைச் செய்வர். ஹோமத்தின் அதிதேவதை மூன்று முகங்களும் நான்கு கைகளும் உடையவளாய்க் கைகளில் வில், கத்தி, அரிவாள், சூலம் என்னும் ஆயுதங்களை ஏந்திக் கருமை நிறத்துடன் இருப்பாள். இத்தேவியின் மூன்று முகங்களில் முதல் முகம் கிழக்குப் புறமாகத் தமோ குணம் பொருந்திய கருநிறமாகப் பகைவர் அஞ்சத்தக்க கோரத்துடன் இருக்கும். இரண்டாவது முகம், ரஜோகுணம் பொருந்திய செந்நிறத்துடன் கூடி, கோரமான தத்திப்பற்களுடன் எதையும்பிடுங்கித்தின்னும் ஆவலுடன் கூடிய நீண்டு தொங்கும் நாக்குடன் இருக்கும்.

மூன்றும் முகம் மேற்குப் புறமாக அமைந்து, சத்துவ குணம் உடையதாய் வெண்நிறம் பொருந்தி வேண்டுவோர் வேண்டிய வற்றை விரும்பிச் செய்யும், பூசை முதலியவைகளை ஏற்றுப் பலனளிக்க வல்லதாய் இருக்கும். இத்தேவிக்கு வேம்பின் அசைவ சமித்தும் பதார்த்தங்களும், ஹோமத் திரவியங்களாம்.

## 3. கருமாரி

திருவேற்காடுதலபுராணத்தில் கூறப்பட்டுள்ளவாறுகருமாரி யின் அருள் வரலாற்றை இங்குக்காண்போம்.

முன்பு ஒருசமயம் மகேசுவரன் ருத்ரபூமியிலிருந்து கயிலைக் குத் திரும்பினர். அப்போது தன் அருகில் இருந்த பாலம்பிகை யிடம் தம்மேனியில் இருந்து விபூதியை எடுத்துக் கொடுத்தார், "இதனைக் கொண்டு உலகில் ஐந்தொழிலையும் புரிந்துவருக" எனப்பணித்துக் கயிலைசென்று நிஷ்டையில் அமர்ந்துவிடுகிருர். உமையும் ஈசன் இருந்த இடத்தின் வடகிழக்கில் அமர்ந்து இச்சாமரத்தில் நினைத்த அளவில் தம்மை ஏழு கன்னிகைகளாக மாற்றிக் கொள்கின்ருர். ஏழு கன்னிகையாரவர், சுந்தராட்சி, ஆகாசாட்சி, பிரமாட்சி, காமாட்சி, மீனுட்சி, விசாலாட்சி, மாரி எனப் பெறுவர். இக்கன்னிகையர் தனித்தனியாக தத்தமக்கு இருப்பிடம் தேடிக்கொள்கின்றனர். சுந்தராசி காடுகளிலும், ஆகாசாட்சி மலைகளிலும், பிரமாட்சி நதிகளிலும், காமாட்சி காஞ்சியிலும், மீனுட்சி மதுரையிலும், விசாலாட்சி காசியிலு மாகச் சென்று தங்குகின்றனர்.

மாரி அந்த ருத்ரபூமியையே தனது இருப்பிடமாகக்கொண் டாள்; தன்னை இரு உருவமாக மாற்றி அருகிலேயே முன்னும் பின்னுமாக அமர்ந்தாள். உருவங்களில்முன்னுள்ள தன்உருவத் தைத்தலைபாகம் நீக்கி மற்றஉடல்பாகம் முழுவதையும் பூமியின் கருவில் (பூமியினுள்) மறைத்து ஐந்தலை நாகம் குடையாக விளங்க, சிவசக்தி ஐக்கியசொருபமாக விளங்கினள். பின்புறம் உள்ள இரண்டாம், உருவம் முழுஉருவமாக–அக்கைகளில் வாள், பொற்கிண்ணம், சூலம், உடுக்கை, என்னும் இவைகளை ஏந்தி, ஐந்துதலை நாகம் குடையாய் இருக்க வீராசனத்தில் அமர்ந்து விளங்குகின்ருள். முன்புறமுள்ள மாரியின் உடல் முழுதும் பூமியின் கருவில் மறைந்தமையால் கருமாரி என்ற திருநாமம் ஏற்படலாயிற்று. உலகத்தார் சிவசக்தி வடிவான கருமாரிக்கே அபிஷேக ஆரதனைகள் செய்து வழிபட்டு அருள் பெற்று வருகின்றனர்.

## 4. ரேணுகாதேவி

முன்னொரு காலத்தில் பிரகு (ப்ரகு) வம்சத்தில் உதித்த ருத்ராம்சமான ஜமதக்னி முனிவர் காட்டில் தவமியற்றி வந்தார். அப்பொழுது விதர்ப்பநாட்டை ஆண்டு வந்தவன் இரைவத ராஜன். அவனுக்குப் பிரமனின் வரத்தால் உதித்தவள் உமையின் அம்சமான இரேணுகை. இரேணுகை தன்னை மணக்குமாறு ஜமதக்னியிடம் வற்புறுத்தினாள். வற்புறுத்தல் காரணமாகக் கோபமுற்றார். ஜமதக்னிமுனிவர் தனது சீடர்களை அழைத்து, 'ரேணுகையை அழித்து வருக' எனக் கட்டளை இட்டார். ரேணுகை ஜமதக்னியின் சீடர்களை விளையாட்டாகவே அழித்து விட்டாள். இதனால் மிகுந்த சீற்றம் கொண்ட ஜமதக்னி தானே போருக்குக்கிளம்பினார்; ரேணுகையுடன்போரிட்டார். ரேணுகை போரின் பொழுது அவரை காட்டின் பல பகுதிகளுக்கும் இழுத்துச்சென்றாள். அப்பொழுது ஒருமூலையில் தன் தலைமட்டும் சிலையாகத் தெரியும் வண்ணம் மறைந்து நின்றாள். ஜமதக்னி அச்சிலையைக் கண்டார்; விவரம் அறிந்தார். ரேணுகையை அவ்விடத்தில் சிலையாகவே இருக்குமாறு சாபமிட்டு ஆசிரமம் திரும்பினார். ஆனால் சாபம் நெருங்காத ரேணுகை, அவர் பின்னாலேயேசென்று, முன்பு தன்னால்அழிக்கப்பட்ட ஜமதக்னியின் சீடர்களை எழுப்பினாள். இதனை அறிந்த ஜமதக்னி மிகவும் மகிழ்ந்து, ரேணுகையை மணந்து கொண்டார். ரேணுகை நான்கு குழந்தைகளை ஈன்றாள்.

ரேணுகை காலையில் நீராடி வழக்கம் போல் முனிவரின் அனுஷ்டானம் முதலியவற்றுக்காகக் கங்கையில் நீர் எடுத்து வரச்சென்றாள்; ஈசன்திருவுள்ளத்தால் கங்கையில் சந்திரனின் பிம்பத்தைக் கண்டு மனம் தடுமாறி சிலநிமிடம் கழித்து தன் செய்கையினைத் தொடர்ந்தாள். அப்பொழுது நீர் எடுத்துவந்த குடம் பூமியில் விழுந்து சிதறியது; நீர் எடுக்காமல் வெறுங் கையுடன் ரேணுகை, ஜமதக்னி முன் சென்றாள். முனிவர் ஞானக்கண்ணால் நடந்தவற்றை அறிந்தார். உடனேதனதுநான்காம்புதல்வன் பரசுராமனை அழைத்தார். ரேணுகையின்தலையினை வெட்டும்படி அவனுக்கு உத்தரவிட்டார். தந்தையின் உத்தரவின்படி கோடரிகொண்டு தன்தாயின் தலையை வெட்டினான்; தாயின்தலையை வெட்டிய தன் வலக்கையையும் வெட்டிக் கொண்டான். தன் உத்தரவை நிறைவேற்றியதற்காக மகிழ்ந்த ஜமதக்னி, பரசுராமனைநோக்கி, 'உனக்கு யாதுவரம் வேண்டும்' எனக்கேட்டார் பரசுராமன், தன்தாயை எழுப்பித் தரவேண்டும் எனவேண்டினான். ஜமதக்னிமுனிவர் பரசுராமனை நோக்கி, வெட்டுண்ட உன்கையை வெட்டுண்ட கைப்பாகத்துடனும்,

ரேணுகையின் சிரசினை அவள் உடற்பாகத்துடனும் சேர்ப்பா யாக' எனப்பணித்தார். பரசுராமன் தன்கையைச் சேர்த்துக் கொண்டு, தன்தாயின் சிரம்வெட்டுப்பட்டுக் கிடந்த இடத்தில் இருந்த வேறு புலைச்சியின் தலையைத் தவறுதலாக எடுத்துத்தன் தாயின் உடலோடு சேர்த்துவிட்டான். ரேணுகை புலைச்சியின் தலையுடன் உயிர்பெற்று எழுந்தாள்.

சிலகாலம் சென்றது. ஜமதக்னியின் ஆவிபிரிந்தது. முனிவரின் உடலை தகனம் செய்யும் போது ரேனுகையும் உடன் கட்டை ஏறுகிருள். இந்திரன் இதனை அறிந்தான். இரேணுகை இறவாமல் இருக்கவேண்டும் எனக்கருதினன். சிதையை அணைத்து அவள் இறப்பதைத் தவிர்ப்பதற்காகப் புனிதநீரை வர்ஷிக்கின்ருள்; சிதைத்தீ அணைகிறது. அதற்குள் ரேணுகையின் ஆடைகள் எரிந்து விடுகின்றன. உடல் முழுதும் தீக்கொப்புளங்கள் உண்டாகி விடுகின்றன.

ரேணுகை சிதையின்றும் எழுந்தாள்; வேப்பிலைகளால் தன் உடலை மறைத்துக் கொண்டாள். வண்ணர் ஒருவரிடம் சென்று பழைய ஆடையை வாங்கி உடுத்திக் கொண்டாள். பசிமேலீட்டால் அருகிலிருந்த புலைச் சேரிக்குச் சென்ருள்; உணவு கேட்டாள். அவர்கள் மீன்குழம்புகலந்த பழைய அன்னத்தை இட்டனர்; ரேணுகை அவ்வன்னத்தை கண்ட மாத்திரத்திலேயே மீன்கள் வெங்காயமாக மாறின இதைக்கண்ட புலையர்கள்; இவள் அந்தணப்பெண் இவளுக்கு நாம் உணவிடுதல் கூடாது' என எண்ணி, சர்க்கரைகலந்த அரிசிமாவு, பானகம், நீர்மோர், என்னும் ஆகாரங்களைக் கொடுத்தனர்; ரேணுகை இவற்றை ஏற்று உண்டாள்.

பின் ரேணுகை தேவர்கள் சூழ இறைவன் முன் சென்ருள். இறைவன் ரேணுகையை நோக்கி, 'நீசக்திஅம்சம் உடையவள்; இறக்கவேண்டியவள் அல்லை. ஆகையால் இவ்வுடலுடனேயே மக்களைக் காத்து வருக' என மொழிந்து 'நீ ஜமதக்னியை மணக்கும் முன் புதருக்குள் சரீரத்தை மறைத்துச் சிரம்மட்டும் சிலைஉருவில் தெரியும்படி இருந்தாய்; அவ்வண்ணமே எப்பொழுதும் தலைமட்டும் தெரியுமாறு இருந்து மக்களைக் காப்பாற்றுக' எனப்பணித்தார். ரேணுகை அன்றுமுதல் சிரம்மட்டும் காட்டி உலகைக் காவல் புரியும் சக்தியாக விளங்கி அருள் புரிகிருள்.

இங்ஙனம் அருள்உருவாம் சக்தி, பல்வேறு கோலம் கொண்டு மக்களுக்கு நலம்பல தருகின்ருள். இதனை உணர்ந்து தெளிதந்து வழிபட்டு நலமடைதலே பிறவிப்பயனுகும்.

**கடிதம்:**

N. Mahalingam B. Sc., F. I. E.,

"Sakthi Nilayam"
Pollachi 642 001.
Tamilnadu
30—3—83.

தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திவ்விய சமூகத்திற்கு எங்கள் வணக்கங்கள் உரித்தாகுக.

இறைவன் திருஅருளாலும், தங்களுடைய அன்புடை ஆசியாலும் எங்கள் இரண்டாவது திருமண விழா (சஷ்டியப்த பூர்த்தி) சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு தம்பிரான்சுவாமிகளை அனுப்பிக்கௌரவித்தும், குருமகாசந்நிதானம் அவர்கள் வைத்தீசுவரன்கோயில் அபிஷேக விழாவில் அன்புடன் 'சிவம்பெருக்கும்சீலர்' எனப்பட்டமளித்து பொன்னுடை போற்றி கௌரவித்ததுமட்டுமன்றி, அன்று மாலை மாயூரத்தில் விழாவிற்கு தலைமை ஏற்றுச் சிறப்பாக வாழ்த்தி அருளியதற்கும், நாங்கள் இருவரும், எங்கள் குடும்பத்தினரும் மிகவும் கடமைப்பட்டு இருக்கிறோம்.

தங்களுடைய ஆசியின் பயனை மேலும் எங்கள் எதிர் காலம், சமயத்துறையிலும், சமுதாயப் பணியிலும் சிறப்பாக ஈடுபட அமையுமென நம்புகின்றோம்.

இறைவன் திருவருளால் குருமகாசந்நிதானம் அவர்கள் சமுதாய வளர்ச்சிக்கும், சமயமுன்னேற்றத்திற்கும், நாட்டிற்கும் வழிகாட்டி நடத்திச் செல்லும் சிறப்பு அமைய வேண்டுமெனப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

கூடிய சீக்கிரம் தருமபுரத்திற்கு வந்து மேலும் உங்கள் ஆசியைப் பெறவிரும்பும்.

தங்கள் அன்புடைய,

**நா. மகாலிங்கம்**

(தம்பதிகள்)

# உபதேசம் பெறலாமே!

வித்துவான் திரு, கா. ம. கண்ணப்பன் எம். ஏ.,

[ தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 3—4—1983 ஞாயிற்றுக்கிழமையன்று அருளிய உபதேசக் கருத்துக்களை ஒட்டி எழுதப் பெற்ற கட்டுரை' ]

அதிகாலையில் எழுந்தேன்; நாள்காட்டியைப் பார்த்தேன். நாள் 3—4—83 ஞாயிற்றுக்கிழமை.

அந்த நாளில் நாள்காட்டித் தாளில் அச்சிடப்பட்டிருந்த பொன்மொழி என்னை உற்சாகப்படுத்தியது.

" படிக்கா விட்டாலும் பெரியோர்கள் சொல்வதைக் கேள் அது வாழ்க்கையில் துன்பம் ஏற்படும்போது துணைநிற்கும் " என்பது அந்தப் பொன்மொழி. கற்றிலனாயினும் கேட்க) — வள்ளுவர்.

எத்தனைப்பொருத்தம்! இன்று தருமையாதீனத் திருமடத்தில் அன்பர்கள் அருளுபதேசம்பெறும் இன்பநாள்! கடமைகளை முடித்துக்கொண்டு சரியாகக் காலை 10 மணிக்குள் திருமடத்திற்குச் சென்று விட்டேன்.

அதற்குள்ளாகவே அறிஞர்கள், பெரியோர்கள், அன்பர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், ஆதீன அலுவலர்கள் ஆகியோர் பயபக்தியுடன் - ஆர்வத்துடன் ஆங்காங்கே திருமடத்தினுள் காணப்பட்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருக்கோயில் வழிபாட்டை முடித்துக் கொண்டு - பண்டாரக்கட்டில் - சித்ராசனத்தில் - சரியாகப்பத்துமணிக்கு எழுந்தருளி அமர்கிறார்கள். இதற்காகத் தமதுபூசைநேரத்தையோ, வழிபாட்டையோ குறைத்துக் கொள்வதில்லை; அப்படி வழிபாடு, பூசனை நேரத்தைச் சுருக்குவது கூடாது; பூசை முதலியன மனஒருமையுடன் கூடியதாதல் வேண்டும் என்று இதற்குமுன் ஓர் அருளுபதேசத்தில் அன்பர்களுக்கு அறிவுரையும் புகட்டியுள்ளார்கள்.

அன்பர்களின் வழிபாடு, திருநீறு பெற்றணியும் இனிய காட்சி, திருமுறைப் பண்ணிசை, பஞ்சாட்சர இசை, நாமாவளி—முறையாக இவைகள் இடம் பெறுகின்றன.

அடுத்து, அங்கே ஓர் அற்புதம் நிகழ்கிறது!

சித்ராசனத்தில் ...... தருமை 4 ஆவதுகுருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் அமர்ந்திருக்கிறார்! ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் குருநாதரை வழிபடும் நோக்கோடு அங்கு வருகின்றார்! எதிரே நிற்கின்றார்! வணங்குகின்றார்! நன்மலர்தூவி அர்ச்சிக்கின்றார்! வழிபடுகின்றார்! அருளுபதேசம் விரும்பி வந்த குருபரர் குருவாணையின் வண்ணம் எதிரே அமர்கின்றார்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சி அன்றும் நிகழ்ந்தது! காணும்பேறு எத்தனைபேருக்குக் கிடைக்கும்? அன்று உபதேசம் பெறவந்த அத்தனை அன்பர்களுக்கும் கிடைத்தது.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைக் 'கயிலைமா முனிவர்' ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகள் வணங்கி வழிபட்டு பணிந்து நின்ற இனிய காட்சியின் இன்ப நினைவு தான் இது!

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் உபதேசத்தைத் தொடங்கு கிறார்கள். முதலில் உபதேசம் பற்றியே உபதேசிக்கிறார்கள்.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை"

என்று அம்பிகைக்கு ஆண்டவன் உபதேசிக்கின்றான்.

இத்தகைய உபதேசம் பெறுதற்குத் தகுதி வேண்டாவா? காரணம் வேண்டாவா? ஆம்! வேண்டும்.

"காரணம் இன்றிக் காரியம் நிகழாது" என்ற தத்துவக் கோட்பாட்டினை எடுத்துக்கூறி,

"வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளும் ...... வேணியார் அருள்செய" என்று திருக்குறிப்புத் தொண்டர் புராணத்திலிருந்து மேற்கோளும் காட்டி விளக்கினார்கள்; சிவன் அருளினான் – இதுகாரணம்; அம்பிகை ஆகமம் கேட்டார் –இது காரியம்; இறைவன் அருள்செய அம்மையார் செயற்பட்டார். இந்நிகழ்ச்சிமட்டுமா? புராணங்கள் பலஆதாரங்கள்தருகின்றன சோமாஸ்கந்தராக-முருகன் சிவபெருமானுக்கு 'ஓம்' என்ற மந் திரப்பொருளை உபதேசித்தநிலையையும் ஒப்பிட்டருளினார்கள்.

'முருகன் ஒருகுழந்தை; ஒருகுழந்தைக்கு இவ்வளவு பெரிய மந்திரப்பொருள் எப்படித் தெரிந்தது?' என்ற யோசனை நமக் கெல்லாம் தோன்றக்கூடும்; விளக்கத்தை அருள்கிறார்கள்.

"குழந்தைகள் மத்தியில் நாம் நல்ல விஷயங்களைப் பேச வேண்டும்; நாம்என்னபேசுகிறோமோ, அதனையே குழந்தைகள் பேசும்; பின்பற்றும்"

ஒரு புராணவரலாற்றில் - வாழ்க்கைத் தத்துவத்தை - எவ்வளவு இனிமையாகச் சுட்டிக்காட்டி விட்டார்கள்! அது மட்டுமன்று. எல்லோருக்கும் மந்திர உபதேசம் செய்து விடலா காது; உபதேசம் பெறும் தகுதியும் இருக்க வேண்டும் என்று தெளிவித்தார்கள்.

அடுத்து, சிவமும் சக்தியுமாக விளங்கும் உலகத்தின் நிலைமையை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கோடு எடுத்துரைத்தார்கள். "மனிதனது உடலில் ஒரு பாதி சக்தி; மறுபாதி சிவம். உடலின் வலப்பாகத்திற்கு உள்ள செயற்பாடு இடப்பாகத்திற்கு இல்லை. வலக்கையால் எழுத முடிகிறது; இடக்கை அப்பயிற்சி இல்லாமல் இருக்கிறது. இப்படி உலகப் பொருள்கள் அனைத்துமே சக்தியும் சிவமுமாய் இருக்கின்றன" - இவ்வாறு விளக்கியுணர்த்தினர்கள்.

மனிதனோடு ஒட்டி உறவுகொண்ட சமயம் சைவம்; அறியாமை காரணமாகவே பலசமயங்களை - சமயங்களில் பலபிரிவுகளை மனிதன் ஏற்படுத்திக் கொண்டான். ஒருசமயத்தின் தொன்மை மட்டுமே அச்சமயத்திற்குச் சிறப்பு அளித்துவிடாது தொன்மைக்கும் சிறப்புக்கும் தொடர்பு படுதலாகாது; இதனைத்

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா; இன்று
தோன்றிய நூல் எனும்எவையும் தீது ஆகா"

என்ற மேற்கோளும் தந்து தெளிவு படுத்தினர்கள்.

தொன்மையானசமயம் என்றுசுட்டிக்கொள்ளும்சமயங்கள் எத்தனையோ உள. என்றாலும் தொன்மையுடன் வாழ்வியலை ஒட்டிவிளங்கும் சமயம் சைவம்; மெய்கண்டார்க்கு முன்பே சைவம் வளர்ந்து விளங்கியது. ஞானசம்பந்தர் போன்ற அந்தணர்களும் சைவசமயத்தை மரபுவழிக்கொண்டு பின்பற்றினர். கி. பி. 7ஆம்நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தஞானசம்பந்தர் வரலாற்றை நுட்பமாகக் காணும்போது ஒருபொருட் கொள்கை அவர் காலத்தில் தோற்றமும் விளக்கமும் இன்றி நின்றமை காணலாம் என்று உரைத்த பாங்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆய்வு நோக்கினைப் புலப்படுத்துவதாக அமைந்திருந்தது.

"மரபிரண்டும் சைவநெறி வழிவந்த கேண்மையினர்" என்ற சேக்கிழார் வாக்கு இவ்வாய்வு நோக்கை உறுதிப்படுத்துவதாக விளங்கின்றது.

இங்ஙனம் சமயச் சார்பான இனிய பல கருத்துக்களை உபதேசித்தருளித்திருத்தொண்டர் புராணச்சிந்தனையாக இளையான்குடிமாறநாயனர் வரலாற்றில் பொதிந்து கிடக்கும் - வாழ்வியல், சமய இயல், தத்துவ நெறிகளை அன்பர்களின் அறிவுப்பசிக்கு விருந்தாக்கி யளித்தார்கள்.

இளையான் குடி...... எங்கிருக்கிறது, இந்த ஊர்? சோழ நாட்டில் திருநள்ளாற்றுக்கு அருகிலும் இருக்கிறது; பாண்டிய நாட்டில் பரமக்குடிக்குப்பக்கத்திலும்இருக்கிறது. இளையான்குடி மாறர் வாழ்ந்த ஊர் எது என்பதைத் தக்க ஆதாரங்களோடு ஆய்வியல் அறிஞர்கள் ஆராய வேண்டும் என்று திருவுளம் பற்றினர்கள். இரண்டு பகுதிகளுக்கும் ஆதாரங்கள் உள்ளமையையும் எடுத்து விளக்கினர்கள்.

மாறனர் பிறத்த குலம் எது?

" நம்பு வாய்மையில் நீடுசூத்திர நற்குலஞ்செய் தவத்தினல் இம்பர் ஞாலம் விளக்கினர் இளையான்குடிப்பதி மாறனர் " என்பது சேக்கிழார் வாக்கு.

சூத்திர நற்குலம் என்ற தொடரைப்பிங்கலந்தை நிகண்டினை மேற்கோள் காட்டிப் பொருள் கூறிய பாங்கு உள்ளத்தைக் கவர்ந்தது. சூத்திரர் எனும் சொல் பின்னவர். சதுர்த்தர், பெருக்காளர்' முத்தொழிலர், மண்மகள் புதல்வர், வினைஞர், காராளர் முதலிய பலபொருள் கொண்டது என விரித்துரைத்துக் காராளராகிய வேளாளர் உழுதுண்போர், உழுவித்து உண்போர் என இருவகையினர் என்பதையும் பகுத்து உரைத்தருளினர்கள்.

வேளாளராகிய மாறனர், தம் வாழ்வில் இடைவிடாது மேற்கொண்டு ஒழுகிய குறிக்கோள் யாது? என அறிய விழைவது இயற்கையல்லவா! இதோ அவர்கள் தந்த இனிய விளக்கம்:

" சிவனடியார்களைத் தம் இல்லத்திற்கு அழைத்து வருவார்; வழிபடுவார்; உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன என்னும் நான்குவகை உணவுகளையும் இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கைப்பு, கார்ப்பு என்னும் அறுசுவையோடு ஆக்கி அமுது செய்விப்பார். இந்நெறி

" தாளற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு "

என்ற உயர்ந்த லட்சியத்தை ஒட்டியது."

இப்படித்தன்குறிக்கோளை இடைவிடாதுஆற்றியநாயனரது செல்வ வளம் சுருங்கியது; ஆனுலும் மனம் சுருங்காமல் கொள்கை வழிநின்ருர் நாயனர். லட்சிய நெறிகொண்ட நாயனர் வாழ்வில் ஒருநாள் இந்நிகழ்ச்சி. நடந்தது :-

இருட்டுநேரம்! மை இருளின்கணம்கட்டுவிட்டு உருகுகின்றது போல இருந்தது அந்த இருட்டு! மழையோபெய்து கொண்டிருக்கிறது. ஒருமுதிய சிவனடியார் மாறனர் இல்லம் நோக்கி வருகிருர் - பசியோடு - நனைந்த உடையோடு! மாறனரோ வறுமை வாட்டுதலால் உணவு இல்லாமல் பசியுடன் படுத்திருக்கிருர்! தம்மைத்தேடி வந்த தவத்தவரைக் காண்கிருர்.

மழையில் நனைந்து வந்த அடியவரின் ஈரமேனியைத் துடைக்கச் சொல்கிறது அவர் அன்புள்ளம்; ஈரத்தைத் துடைக்கிறார் அமர்விக்கிறார். அடியவரோ பசியின் வாட்டத்தால் படுத்துவிடுகிறார்.

குடும்பத்தில் உணவுத்தட்டுப்பாடு! மாறனாருக்கு அமுதூட்டும் ஆவல்! அடியவரோ பசியுடன் வந்துள்ளார்! மாறனார் மனைவியை நோக்கினார்; மனைவியார் ஒருகூடையை எடுத்து வந்து கொடுத்து " இன்று பகல் வயலில் விதைத்தசெந்நெல்லை எடுத்து வந்தால் வல்லவாறு அமுது ஆக்குவேன் " என்றார்.

கூடையைச் சுமந்து வண்ணம், பறவைகளும் உறங்கும் இருட்டுவேளையில் கால்களால் தடவியவாறே, குறியின்வழியே மாறனார் தம்வயலுக்குச்சென்றார். வயலில் மழையினால்ஒதுங்கிக் கிடந்த முளைநெல்லை வாரிக்கூடையில் போட்டுக்கொண்டார். இல்லம் திரும்பினார். வாசலில் நின்ற மனைவியார் கூடையை வாங்கிக்கொண்டார்.

எப்படிச் சமைப்பது? முளைநெல்லை வறுத்து இடிக்கவேண்டுமே! அடுப்பு மூட்ட விறகு இல்லையே! ' வெந்தழல்அடுப்பின் மூட்ட விறகு இல்லை ' என்றார் மனைவியார். வீட்டின் கூரையில் வேய்ந்துள்ள அலகினை மாறனார் அறுத்துக் கொடுத்தார்,

அமுது ஆக்கிவிடலாம்! " கறிக்கு இனி என்செய்வோம்? இப்படி ஒருகேள்வி அங்கே பிறந்தது. மனைவியார்கேட்டதற்கு இணங்கிப் புறக்கடை சென்றார் மாறனார்! குழியளவு கூட உயராத - குழிநிரம்பாத - கீரையினை வேரோடு பறித்து எடுத்து வந்து கொடுத்தார். இப்பகுதியை விரித்துரைக்கும்போது "பாசம் வேரோடு பறிக்கப்பட வேண்டும்" என்னும் சைவ சித்தாந்த நெறியைச் சேக்கிழார் வாக்கின் வாயிலாகத் தெளிவித்தார்கள்.

> " குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
> பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க "

என்பது சேக்கிழார் செம்மொழி.

கீரையைக்கொண்டே வேறுவேறு கறியமுதுகளை ஆக்கினார் அடிசிற்கினிய அம்மையார். அமுதும் கறிகளும் ஆயின. அடியவர் பக்கல் சென்று உறக்கத்தினைக் கலைத்து " அமுது செய்தருள்க" என வேண்டினர். அதே கணத்தில் அடியவர் மறைந்தார்! சோதி தோன்றியது. மாறனாரும் மனையாரும் திகைத்தனர்.

இறைவன், அவர்களுக்குக்காட்சித்தருகிறுன்; "அன்பனே! நீ நின் மனைவியுடன் குபேரனும் ஏவல் செய்ய என்பெருவுலகம் எய்துக" என்று இருவருக்கும் சாலோக முத்தி அருளினுன்– இந்த அருள் வரலாற்றுக்குள்ளே வாழ்க்கைநெறிகள் நிறைந்து விளங்குவதை அருளுபதேசத்தில் சுட்டிக்காட்டினுர்கள்.

"வறுமைக் காலத்திலும் அடியவரை உபசரித்த மாறனுர் மனம் உயர்ந்தது! வளஞ்சுருங்கினும் மனம் சுருங்காத மாறனு ரைப்போல வாழாமல் – வளஞ்சுருங்கும் போது மனம் சுருங்கும் உலகமக்கள் வாழ்க்கை நெறி தவறுனது" எனச் சமுதாய நோக்கினை உணர்த்தினுர்கள்.

மாறனுர் மனைவியார் நெல், விறகு முதலியவற்றை ஒவ் வொன்ருக வேண்டிப் பெற்றமையை எடுத்துக்காட்டி, குடும்பப் பெண்கள், குடும்பத்தில் வசதிவாய்ப்பு இருக்கும் போது தேவைகளை ஒருசேரப்பெறலாம்; வசதிக்குறைவு நேரும்போது படிப்படியாக–மனமறிந்து–தேவைகளைக் கூறவேண்டும் என்று குடும்ப நெறி புகட்டி, மகளிர் இத்தகைய அருள் வரலாறுகளைப் படித்தும் கேட்டும் குடும்பம் நடத்தும் பாங்கினை வளப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினுர்கள்.

நல்குரவு (வறுமை) துன்பம் தருவது; வறுமையினுல் எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் மேற்கொண்ட நெறியி னின்றும் பெரியோர்கள் திறம்பார்; இந்த தூய கொள்கையை நாட்டுக்கு அறிமுகப்படுதினுல் – அப்படி வாழ்ந்த மாறனுரைப் பற்றி உணர்த்தினுல் – மக்கள் அவரைப் பின்பற்றி நன்மை பெறுவர் – என்ற நோக்கத்தோடு இறைவன் அடியவராக மாறனுர்மனைநோக்கி வந்தார் என்று மிக அற்புதமாக விளக்கம் அருளியது அன்பர்களைத் தெளிவு கொள்ளவைத்தது; மனம் மகிழச் செய்தது.

உபதேசங்களில் அருள் வரலாறுகள் மட்டுமே உணர்த்தப் படுவதில்லை. வரலாற்றுக்குள்ளே புதைந்து கிடக்கும் வாழ்க்கை நெறிகள் – சமயத்தத்துவங்கள் – சமுதாயநெறிகள் அனைத்தை யும்சிந்தனைக்கு விருந்தாக்கித் தக்க மேற்கோளோடு – சொல் ஆய்வுகளோடு – நடைமுறைகளோடு – ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் உபதேசிக்கும்பாங்கு நம் நெஞ்சை நெகிழ் விக்கின்றது.

நிறைவாகச் சொல்லப்போனுல் அருளுபதேசம் பெறும் அன்பர்கள் புண்ணியவான்கள்! ஆகூழ் இருக்குமானுல் அடுத்த மாதமும் அருளுபதேசம் பெறுவோம்; பயனுறுவோம்!

திருவாவடுதுறை ஆதீனம்
22 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

# பரிபூரணம்

சைவ சமயிகட்குரிய ஆசாரிய பீடங்களில் ஒன்ருய்த் திருக்கயிலாய பரம்பரையில் நந்திதேவர் திருமரபில் மெய் கண்ட சந்தானத்தில் வழிவழியாகவரும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்களைப் பெற்றுவிளங்கும் பெருமை உடையது திருவாவடுதுறை ஆதீனம்.

ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள், இத்திருமடாலயத்தின் ஆதி குருமூர்த்திகள். அக் குருமூர்த்திகளுக்குப் பின் 22 ஆவது குருமகாசந்நிதானமாய் 1967 ஆம் ஆண்டு ஞானபீடத் தமர்ந்து அருட்பணிகள் பலவற்றை ஆற்றிவந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் 7—4—83 வியாழக்கிழமை இரவு பரிபூரணம் எய்தினர்கள்.

இவர்கள் தம் ஆதீனத்துக்குச் சொந்தமான திருவா வடுதுறை திருக்கோயில், திருவிடைமருதூர்த்திருக்கோயில் முதலிய பெரியசிவாலயங்களைத் திருப்பணிகள்புரிந்து மகாகும்பாபிஷேகம் செய்வித்தும், ஆவுடையார்கோயில் என வழங்கும் திருப்பெருந்துறைத் திருக்கோயில் திருப் பணியைத் தொடங்கியும் திருவாவடுதுறை எல்லையிலுள்ள நெடுஞ்சாலையில் தோரண நுழைவுவாயில் அமைத்தும், மாநாடுகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்த மெய்கண்டார் விலாசம் என்ற பெயரால் அரங்கம் அமைத்தும், திருமந்திர மாநாடு, திருமுறைக்கருத்தரங்கம், திருவாசகமாநாடு அகில உலகச் சைவமாநாடு முதலியனநிகழ்த்தியும், திருமுறைகள் மற்றும் சமயநூல்கள் பலவற்றை இலவசமாக வெளி யிட்டும், மெய்கண்டார் திங்களிதழ் தொடங்கியும், பல வகையான சமய சமூகப்பணிகளுக்குப் பெருங்கொடைகள் வழங்கியும் எண்ணற்ற அருட்பணிகளை ஆற்றிய பெருமைக் குரியவர்கள்.

இளமை முதல் திருவாவடுதுறை ஆதீனத்தின் திருக் கூட்டத்து அடியவராய் விளங்கிப் பல்லாண்டுகள் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளையும், ஸ்ரீ ஞானமாநடராசப்பெரு மானையும்பூசித்துப் பெரியபூசை ஒடுக்கம்என்ற பெருமைக் குரியவர்களாய்விளங்கி 23—9—67 ல் ஞானபீடத்தமர்ந்து $15\frac{1}{2}$ ஆண்டுகள் திருவாவடுதுறையில் ஞான அரசுபுரிந்து தமக்குப் பிற்றோன்றலாய் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளை நியமித்து 7—4—83 வியாழக் கிழமை இரவு சுத்தாத்துவித சைவசித்தாந்தப்பரமுத்திநிலே எய்தியருளினார்கள்.

தூயஉள்ளமும், பக்திவைராக்யமும், திடசித்தமும் தவ வலியும் உடைய இம்மகாசந்நிதானத்தின் பெருமைகளைச் சைவ நல்லுலகம் போற்றிக் கொண்டாடும் என்பது உறுதி.

## எதிர்காலத்தின் சிறப்பு :

திருவாவடுதுறை ஆதீனத்தின் 23 ஆவது குருமகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஞானபீடம் அமர்ந்துள்ளார்கள். இளமையும், கல்வி நலமும், தொண்டு மனப்பான்மையும், துறவுள்ளமும் உடைய இக்குருமூர்த்திகள் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் அவதரித்த விக்கிரமசிங்கபுரத்தில் பரம்பரைச் சைவவேளாளர் குலத்தில் தோன்றியவர்கள். இவர்கள் அருளாட்சிக் காலத்தில் திருவாவடுதுறை ஆதீனம் மேலும் பல்வகைச் சிறப்புக்களையும் பாங்குறப் பெறும் என்பது உறுதி.

வாழ்கதுறைசைக்குருமாமணிகள்! வளர்கசைவசமயநெறி!

கயிலாய பரம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானுவாகிக்
குயிலாரும் பொழிறிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

# அருணகிரிநாதரின் ஆராப்பெருவிருப்பம்

'சித்தாந்தப் புலவர்மணி'

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

**முன்னுரை :**

அருணகிரிநாதரின் அருமை பெருமைகளையும், அவர் அருளிச் செய்த சொற்பொருள் நலங்களிற் சிறந்த அற்புதமான திருப்புகழ்ப் பாடல்களையும் பற்றி அறியாதவர், தமிழ்நாட்டில் எவரும் இரார். " அதல சேடனுர் ஆட " எனத் தொடங்கும் திருப்புகழில், " பிரபுடதேவ மாராயன் " எனவரும் சொற்றொடர்க் குறிப்பினுல், அருணகிரிநாதர் விசயநகர அரசர்களுள் ஒருவனுக விளங்கியிருந்த இரண்டாம் தேவராயன் என்னும் மன்னனின் காலத்தில் இருந்தவர் என்பது தெளிவுறத் தெரிகின்றது. வரலாற்று ஆசிரியர்கள், இவ்வரசன் கி. பி. 1450 – ஆம் ஆண்டில் அரசாண்டிருந்ததாகக் கல்வெட்டுக்களைக் கொண்டு ஆராய்ந்து கூறுகின்றனர்.

**கிருபாசித்தர் :**

அடியவர்களை இருவகையினராக நூல்கள் குறிப்பிடுவதுண்டு. ஒருசிலர் பன்னெடுங் காலம் முயன்று பத்தி செய்து தவம் கிடந்து, பின்னர் இறையருளைப் பெறுவர்; இவர்கள் சொருபாசித்தர் எனப்படுவர். மற்றும் ஒருசிலரோ, இப்பிறவியில் ஏதும் செய்திலராயினும் முன்பு செய்த புண்ணியங்களின் பயனுகச் சாதாரணநிலையில் இருந்துவரும்பொழுதே, திடீரென்று இறைவனின் திருவருளைப் பெற்று மேலான நிலையை எய்துவது உண்டு; இவர்கள் கிருபாசித்தர்கள் எனப்படுவர். அருணகிரிநாதர் கிருபாசித்தர் என்னும் வகையைச் சேர்ந்தவராவர். அவருக்குத் திடீரென்று முருகனின் திருவருள் கிடைத்தது. இதனை அவரே,

" அறிவும், அறிதத்துவமும், அபரிமித வித்தைகளும்,
அறிஎன இமைப்பொழுதில் வாழ்வித்த வேதியன் "

என்று, தமது திருவகுப்பின் பன்னிரண்டாம் பாடலில் முருகனைப் போற்றியிருப்பதனுல் தெரிகின்றது. " யாம் ஓதிய கல்வியும் எம்

அறிவும் தாமேபெற வேலவர் தந்தருளினர் " என்று அவர், தம் கந்தரனுபூதியில் குறிப்பிட்டிருப்பதும், நாம் கருதுதற்குரியது.

### திருப்புகழ்ச் சிறப்பு :

அருணகிரிநாதரின் திருப்புகழ், சித்திர கவித்துவம் நிறைந்தது; வகைவகையான சந்தபேதங்கள் அமைந்து, கேட்பதற்கே மிகஇனிமையான, தலைசிறந்த ஓசைநலம் மிகுதியாகப் பெற்றது. அதனல் அவர் பாடிய திருப்புகழ், அவர் காலத்திலேயே நாடெங்கும் பரவிப் பெரிதும்போற்றப் பெற்றது. தமிழகத்தின் தெற்கு வடக்கு கிழக்கு மேற்கு ஆகிய எல்லாத் திசைகளில் உள்ளவரும், திருப்புகழைப் போற்றிப் பாராட்டி ஓதி மகிழ்ந்தனர். இத்தகைய திருப்புகழைப் பாடும்படி எனக்கு அருள் செய்த முருகப்பெருமானை, யான் எப்பொழுதும் மறக்கமாட்டேன் என்று, அருணகிரிநாதர் தமது திருப்புகழில் குறிப்பிடுகின்றார்.

" பச்சிம தட்சிண உத்தர திக்குள
 பக்தர்கள் அற்புதம் எனஓதும்
சித்திர கவித்துவ சந்தம் மிகுந்து
 திருப்புகழைச் சிறிது அடியேனும்
செப்பென வைத்து உலகிற் பரவத்
 தெரிசித்த அனுக்கிரகம் மறவேனே "

என்பதனல், திருப்புகழின் அருமை பெருமைகளை அருணகிரிநாதர் காலத்திலேயே, தமிழ் மக்கள் அற்புதம் அற்புதம் எனப் பாராட்டி மகிழ்ந்தனர் என்பது தெரிகின்றது.

### வாக்கிற்கு அருணகிரி :

திருப்புகழ், நம் செந்தமிழ் மொழியிலுள்ள கவிதை வகைகளிலேயே, மிகவும் தனிச் சிறப்பான பெருமைகள் வாய்ந்தது. தாளநுட்பங்களும், சந்தபேதங்களும், மிக இனிமையான ஓசை நலங்களும், அழகிய பற்பல சொற்றொடர் அடுக்குகளும் கொண்டது. அதனல் அவற்றில் மனத்தைப் பறிகொடுத்து முருக பக்தர்கள் அனைவரும் அதனைப் பாடிப் பாடி மகிழ்வர். இவ்வாற்ருல், வாக்குநலமும் வளமும் சிறந்த கவிதைத் திறனில் தலைசிறந்தவர் என்னும் கருத்தில், " வாக்கிற்கு அருணகிரி " என்று, தமிழ்கூறும் நல்லுலகம் அவரைப் பெரிதும் புகழ்ந்து போற்றிப் பாராட்டி வருகின்றது.

### அருணகிரிநாதரின் ஆசை :

அத்தகைய பெருநலஞ் சான்ற அருணகிரிநாதருக்கு ஆராத ஒருபெரும் ஆசை மேலோங்கியிருந்தது. முருகப்பெருமான் அவருக்கு "முத்தைத்தரு பத்தித் திருநகை" என்னும் அடியெடுத்துக் கொடுத்து, அவரைப் பாடுமாறு பணித்து அருள் செய்தான். அவரும் பாடும் பணியே பணியாய், அரிய பலப்பல திருப்புகழ்களைப் பாடி முருகனைத் துதித்துவழிபட்டுப் போந்தார் ஆயினும், அவருக்குத் தமது பாடல்களில் போதிய மனநிறைவு ஏற்படவில்லை. மேலும்மிகமிகச் சிறப்பாகப் பாடுதல் வேண்டும் என்று, அவர்தம் திருவுள்ளம் பெரிதும் விரும்பியது. 'பாம்பறியும் பாம்பின்கால்' என்றபடி, பெரியோர்களின் பெருமைகளைப் பெரியோர்களே அறிந்து போற்றவல்லவர்களாவர். தமது பாடல்களைக் காட்டிலும் தமக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட திருஞானசம்பந்தரின் தேவாரத் திருப்பாடல்களில், அருணகிரிநாதர் அளவிலாத பெருமதிப்பும் பெரும்பக்தியும் கொண்டிருந்தார். அதனால்,

" புமியதனில் ப்ரபுவான புகலியில்வித் தகர்போல!
அமிர்தகவித் தொடைபாட அடிமைதனக் கருள்வாயே!
சமரில்எதிர்த் தகர்மாளத் தனிஅயில்விட் டருள்வோனே,
நமசிவயப் பொருளோனே! ரசதகிரிப் பெருமாளே! ',

என்று, முருகன்பால், அவர் வேண்டிக் கொள்கின்றார். நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப்பெருமானின் அற்புதமான தேவாரத் திருப்பாடல்களைப் போலத் தாமும் பாடுதல் வேண்டும் என்றும், அத்தகைய பேராற்றலைத் தமக்கு முருகப்பெருமான் அளித்தருள்தல் வேண்டும் என்றும், அருணகிரிநாதர் பெரிதும் ஆசைப்படுகின்றார்.

### சொற்பொருள் நுட்பங்கள் ;

(1) ஞானசம்பந்தரின் மிக மேலான பெருமையை, நலமுற அறிந்து உணர்ந்தவராதலின், அவரை அருணகிரிநாதர் குழந்தை என்றோ, பாலன் என்றோ, பிறவாறோ குறிப்பிடாமல், உலகத்திற்கே ஒருபெரும் தலைவர் என்னும் கருத்தில் " புமியதனில் ப்ரபுவான " என்கின்றார். தாயுமான சுவாமிகளும் இவ்வாறே "வெம்பந்தம் தீர்த்து உலகாள் வேந்தன் திருஞான சம்பந்தன் " என்று அருளிச் செய்திருத்தல் காணலாம்,

(2) உலகத்திற்கே ஒரு பெரும் தலைவர் என்று அறிந்துணர்ந்து போற்றத்தக்க பெருமாட்சிமை பெற்றிருந்ததனால், ஞானசம்பந்தரை அருணகிரிநாதர் அவர்தம் பெயர்கூறிக் குறிப்பிட நினையாமல், தமது பெருமதிப்பும் பக்தியுணர்வும் தோன்ற 'வித்தகர்' என்கின்றார். 'வித்தகர்' என்னும் சொல், பிறர் எவராலும் செய்தற்கு அரிய செயற்கரும் செயல்களை மிகமிக எளிதாகவும் இனிதாகவும் செய்து முடிக்கும் ஒப்புயர்வற்ற திறமை மிக்கவர்களைக் குறிப்பதாகும். "நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும், வித்தகர்க்கு அல்லால் அரிது" என்பது திருக்குறள். இதன்கண் திருவள்ளுவர் 'வித்தகர்' என்னும் சொல்லை, அதன் திட்பநுட்பத் திறம் தெரிந்து கையாண்டிருத்தல் காணலாம்.

(3) வறிதேவித்தகர் என்னுமல், 'புகலியில் வித்தகர்' என்றநுட்பமும் ஊன்றி உணரற்பாலது, புகலி என்பது சீர்காழிக்கு உரிய பெயர். முன்னொரு காலத்தில் சூரபதுமனுக்கு அஞ்சித் தேவேந்திரன், தேவர் உலகத்தை விட்டு ஓடிவந்து, சீர்காழியில் புகலடைந்து மறைந்து உறைந்து இருந்தனன். அதனால் சீர்காழிக்குப் புகலி என்னும் காரணப்பெயர் உண்டாயிற்று. அச்சொல்லை, ஈண்டுக் குறிப்பால், சிவநெறியும் செந்தமிழும், ஞானசம்பந்தர்பால் நண்ணிப் புகலடைந்த நிலையையும் சுட்டுமாறு, அருணகிரிநாதர் வழங்கியருள்கின்றார் எனலாம்.

(4) ஞானசம்பந்தப் பெருமான் நவின்றருளிய பாடல்களைப் பொதுவாகப் பாடல்கள் என்றோ, கவிதைகள் என்றோ; பதிகங்கள் என்றோ, பிறவாறோ குறிப்பிடாமல், 'அமிர்தகவி' என்று போற்றிச் சிறப்பித்திருப்பது, அப்பாடல்களில் அருணகிரிநாதர்க்கு இருந்த பெருமதிப்பு மிக்க பக்தியின் ஊற்றத்தை உணர்த்துகின்றது எனலாம். சிலகவிதைகள் செவிக்கு இனிக்கும். கவிதைகளைச் 'செவிநுகர் கனிகள்' என்று அறிஞர்கள் போற்றுவதுண்டு. திருஞானசம்பந்தரின் தேவாரத் திருப்பதிகங்கள், செவிக்கு மட்டுமோ சிந்தைக்கு மட்டுமோ இனிப்பவை அல்ல! உயிருக்கும் உயரின்பம் அளித்து, உயிர்களின் இறப்புத் துன்பத்தை மாற்றி, அவைகளையெல்லாம் இறவாதபேரின்பநிலையில், என்றும் இருத்திவைத்து உய்விக்கும் உயர்வுடையவை; ஆதலின் அவற்றை "அமிர்தகவி" என்று புகழ்ந்து போற்றினர்.

(5) ஞானசம்பந்தரின் சிவநலஞ் செறிந்த செந்தமிழ்த் தேவாரப்பாடல்கள், சந்தநலங்கள் செறிந்து, அவருக்கு

முன்னரோ பின்னரோ பிறரெவரும் பாடாத நிலையில், பலப்பல புதுப்புதுமையான விசித்திரமான சித்திர கவிதைகளைக்கொண்ட வையாதலின், அத்திறம் தெள்ளிதின் விளங்க அமிர்தகவி என்றதோடு அமையாமல், " அமிர்தகவிக் கொடை " என்றும், மேலும் சிறப்பித்துக் குறிப்பிட்டார். திருஞானசம்பந்தர் அருளிய சிறந்த பலப்பல செந்தமிழ்ப் பாடல்வகைகளைத் தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமான், ஒருங்கே தொகுத்துரைத்திருத்தல் ( 276 – 277 ) ஈண்டு உணரற்பாலது.

(6) ஞானசம்பந்தர் தம்தேவாரத் திருப்பதிகங்களை, நாளும் இன்னிசையால் நாடெங்கும் பரப்பிய பெருமாட்சிமையுடையவ ராதலின், இயற்ற என்றோ, புனைய என்றோ, அமைக்க என்றோ, பிறவாறோ கூறாமல், " அமிர்தகவித் தொடை பாட, அடிமை தனக்கு அருள்வாயே " என்று முருகன்பால் வேண்டுவா ராயினர்.

## முடிவுரை :

இவ்வாற்றால் அருணகிரிநாதரின் ஆராத நற்பேராசையும், அவர் அங்ஙனம் ஆசைப்படுதற்கு ஏற்ப அமைந்த திருஞான சம்பந்தப் பெருமானின் செந்தமிழ்த் தெய்விகக் கவிதைச் சிறப்பும், நம்மனோர்க்கு நன்கினிது செவ்விதிற் புலப்படும். ஆதலின் நாம் அனைவரும் அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்களையும், அவர் வியந்து புகழ்ந்து மகிழ்ந்து போற்றிய திருஞானசம்பந்தரின் தேவாரத் திருப்பாடல்களையும், நாளும் இடையறாது ஓதி இறைவனை வழிபட்டு, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து உய்ய முயலுதல் நமது கடமையாகும்!

---

## தில்லைச்சிற்றம்பலமே சேர்

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று – நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர்.

— ஐயடிகள் காடவர்கோன்.

# காளத்திவேடனின் மாசிலா அன்பு!

**புலவர். திரு. மு. வைத்தியநாதன்**

உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், திருச்சிராப்பள்ளி – 2.

*முன்னுரை :*

பக்திச் சுவையை ஊடுபொருளாகக்கொண்ட, தமிழ்க் கருவூலமாகும், திருத்தொண்டர்மாக்கதை; அதுபோற்றிப்பரவும் திருத்தொண்டர்களில், அன்பே உருவமாகத்திகழ்ந்த கண்ணப்பரின் திறம் சிந்தித்துத்தெளிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

*சிறுத்தொண்டர் :*

காஞ்சிப் பல்லவனின் படைத் தலைவராக இருந்த பரஞ்சோதியார், பின்னாளில் வாளால் மகவரிந்து ஊட்டிய செயற்கரும் செயல் செய்து சிறுத்தொண்டரானார். அவர் மாமாத்தியர் குலத்தில் பிறந்து, வடநூல், தென்தமிழ்நூல் கலைகள் தெளிந்தவர். உலகில்வளர் உயிர்க்கெல்லாம் உயர்காவல்பூண்டவர். சிவனடியார்களுக்கு அமுதிடல் பணியைத் தன்பணியாகக் கொண்டவர்.

*திருநீலகண்டர் :*

தில்லையிலேதோன்றி, மண்வேளார் மரபு விளங்க, பொய்கடிந்த அறவாழ்வு மேற்கொண்டு, மனைவி அருகில் இருக்க, ஐம்புலன்களைவென்று விளங்கியவர் திருநீலகண்டர். "எம்மைத் தீண்டுவாராகில் திருநீலகண்டம்" என்று கூறிய, மனைவியின் உரையையே தெய்வஆணைமொழியாகக்கொண்டு அறநெறி வழுவாது வழிபாடுசெய்து வாழ்ந்தவர்.

*திண்ணன் யார் ?*

இவர்கள் இருவரும் உலகியலில் திளைத்தவர்கள். நல்லனவும் அல்லனவும் அறியும் வாய்ப்புப் பெற்றவர்கள். ஆனால், திண்ணனாரின்நிலை என்ன? அவர்பிறந்து வளர்ந்த சூழ்நிலைதான் என்ன ? காடுறை வாழ்க்கையர்; களிமகர். வேட்டை

யாடுவதும், விலங்குகளின் இடுப்பை ஒடிப்பதுமாகிய கொடுஞ் செயலினர், அழிவிற்குதவும் வில்லினர்; வெஞ்சினமடங்கல் போல்வார், இத்தகைய திண்ணனூர்தாம் செய்த செயல், நம் சிந்தைக்கும் மொழிக்கும் அப்பாற்பட்டது.

பாரம் கழிதல் :

நாணனுடன் வேட்டைமேற் செல்கிறுன் திண்ணன். நாணனிடம் தொலைவில் தெரியும் மலையைக் காட்டி, அதுயாது என? அது காளத்திமலை; அங்குக் குடுமித்தேவர் கோயில் கொண்டுள்ளார்; கும்பிடலாம் வா? என்று தோழன் அழைக்க, போந்த திண்ணன், பழம்பிறப்புவினைப் பாரமெல்லாம் கழியப்பெற்றுன். காளத்திநாதரிடம் தலையன்பு கொண்டான். என்பும் உருகும் நிலையடைந்தான். புறச்சார்புகளை முழுதும்மறந்து துறந்தான்.

அன்புருவம் ஆதல் :

காளத்தி மலைமேல் மருந்தாகவுள்ள பெருமானைக் காணும் முன்னே, அவர் அருள்நோக்கால் 'பொருவில் அன்புருவம்' ஆனுன் என்பதைச் சேக்கிழார் அடிகள்,

" திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றுஅவர் காண முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல, நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில்அன் புருவம் ஆனுர் "

என்று போற்றியுள்ளார்.

தனிமை நன்றோ ?

தன் குளிர்ந்த கண்களால் காளத்திப் பெருமானைக் கண்ட திண்ணன் 'துணைவர் யாருமின்றித் தனிமையில் மறக்குலத்து வேடவன்போல் இருக்கலாமோ?' என்று கேட்கின்றுன். உள்ளத்தின் ஈடுபாடு காரணமாக நைந்து போகின்றுன்.

" வெம்மறக் குலத்துவந்த வேட்டுவச் சாதியார் போல்
கைம்மலை கரடி வேங்கை அரிதிரி கானந் தன்னில்
உம்முடன் துணையாய் உள்ளார்ஒருவரும்இன்றிக்கெட்டேன்
இம்மலை தனியேநீர் இங்கு இருப்பதோ ? என்று நைந்தார் "

என்பது பாடல்.

### அன்புப் பிழம்பு :

முனிவர்களாலும் தேவர்களாலும் காணமுடியாத இறைவனைக்கண்டு 'நேர்பெற நோக்கி நின்றான், நீளிருள் நீங்க நின்றான்.' திண்ணு! நீ என்ன மால் கொண்டாயா? என்று நாணன் கேட்டான். திண்ணனிடமிருந்து பதிலேதும் இல்லை. பலகாற் பழகியதோழன் முகத்தை நோக்கும் நிலையிலும் திண்ணன் இல்லை. காளத்திப் பெருமான் அருள்நோக்கம் காரணமாக, இரும்பு பொன்னாவதுபோல, யாக்கையின் பரிசும், இரண்டு வினைகளும், தொடரும் மும்மலங்களும்நீங்க, அன்புப் பிழம்பாய்த்திரியலானான். இவை என்ன? சாதாரணசெயல்களா? யாரும் அடையமுடியாத தெய்வீக அருள்பெறும் உயர்நிலையன்றோ?

### அவன்செயல் நமக்கினியது :

புறத்தொண்டு புரிந்துவந்த சிவகோசரியார் உணரும்வகையில், அன்பனே! திண்ணனைக் கைதவனும் வேடன் என்று எண்ணிவிடாதே! அவன்செயல்! அன்புடன் கொணர்ந்த எச்சில்நீர். சுவைத்த ஊனமுது, சூடியமலர் யாவையும் எமக்கு நன்றும் என்று கூறியதுடன்,

" அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலைஇவ்வாறு அறிநீ என்றருள் செய்தார் "

### தடுக்காதது ஏன்?

வேடர்குலப் பெருந்தவத்தால் வந்து, கொள்கையின் உம்பர் மேலான் ஆகிய திண்ணன், பெருமானின் வலத்திருக்கண்ணில் புண் ஏற்பட்டுக்குருதிவழிந்தபோது, 'ஊனுக்கு ஊன்' என்னும் உரைப்படி, தன்வலக்கண்ணைப் பெயர்த்துஅப்பினான்' பெருமான் ஏன் அதைத் தடுக்கவில்லை? அவன் அன்புநிலை உலகிற்குத் தெளிவாகத்தெரிதல் வேண்டும் என்று எண்ணியதால் தடுக்கவில்லை.

### மாசிலா அன்பு :

மீண்டும் அவன் அன்புணர்வை வெளிப்படுத்த இடக்கண்ணிலும்குருதி, வழிய நின்றபோது, மருந்து கைகண்டவனாகிய திண்ணன், ஒருதனிப் பகழி எடுத்தான். தன் இடக்கண்ணைப் பெயர்க்க முற்பட்டான். தன்னுணர்வு அற்றுவிட்ட திண்ணன் தொடுதோல் அடையாளம் ஆக்கிச் சிந்தையாலும் கருதரிய

செயற்கரும் செயல் செய்யமுற்பட்டபோது தேவதேவனும் பெருமான் தரித்திலனுய், இடக்கை நீட்டிக், "கண்ணப்ப நில்" என்று கூறி அவன் கையைப் பிடித்துத் தடுத்தார். இப்பொழுது தடுக்காவிட்டால், திண்ணன்நிலை யாதாகும்? அவன்தன் மாசிலா அன்பு முழுமையாக வெளிப்படும்வரை, இறைவன் வாளாவிருந்தார். வெளிப்பட்டதும் அருள்புரிய அருள்உள்ளங் கொண்டார்.

என்வலத்தில் இரு :

இறைவனுல் திண்ணன் கண்ணப்பரென்று அழைக்கப் பெற்ருர். கண்ணப்பரான திருத்தொண்டர் பெற்றபேறு வேறு யார் பெற்ருர்? ஏறு உயர்த்த பிரான், தன் கையால், கண்ணிடந்து அப்ப உதவும், திண்ணன் கையைப்பிடித்துக் கொண்டு மாறுபாடில்லாத அன்புடையவனே! என்றும் 'என் வலப் பாகத்தில் இரு' என்றும் அருள்புரிந்தார்.

மெய்அறிவு, ஆள்வினை, அன்பு:

சிவபிரானை மெய்அறிவால் அடைந்தவர் ஞானசம்பந்தர். அவர் "ஞானத்தின் திருவுரு" என்று அழைக்கப்பட்டார். இறைவனுல்அன்புடன் ஞானப்பால் கொடுத்து ஆட்கொள்ளப் பட்டார்.

நாவுக்கரசர்தன்னுடைய ஆள்வினைப்பணியால் இறைவனை அடைந்தவர். கைத்தொண்டாகும் உழவாரப்பணி செய்தவர். 'ஓடும் செம்பொனும் ஒக்க நோக்கும்' தன்மையர். இறை பணியே தன் கடன் எனக் கொண்டவர்.

திண்ணன் அன்பினுல் ஆண்டவனை அடைந்தவன். அன்பு பிழம்பாய்த் திரிந்தவன். ஐம்புலவேடர்களை வென்றவன். இதனுலன்ருே? "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" என்ருர் மணிவாசகப் பெருந்தகை.

முடிவுரை :

எம்பராபரன்தாள்நினைந்து, அன்பு பொங்கியமுவிருநாளில்' ஊனமுதிட்டு, அரன் வலப்பால், பொருந்திய துங்கமிகுதவத்தவர் கண்ணப்பர் ஆவர்.

இறைவனிடம் தலையன்பு செலுத்தி, அன்பே உருவமாக விளங்கி, தேவரின்மேலான் ஆகி, யாராலும் தரவியலாத கண் தந்து சிவமேயானவர் கண்ணப்பர் ஆவார்.

# அப்பர் கண்ட பக்திநெறி

திரு. இரா. பொன்னு
வரலாற்றுத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

" ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நானி லாவி இருப்பன் என் நாதன் "

சங்க காலம் முடிவுற்றுத் தமிழ்நாட்டில் தோன்றிய களப்பிரர்களின் ஆட்சி, சமணம், சாக்கியம் ஆகிய இருமதங்களின் செல்வாக்கினை நிலைநாட்டியது. சமண சாக்கிய மதங்களின் துரித வளர்ச்சியில் சைவ, வைணவ மதங்கள் புத்துணர்வு பெறுவதற்கான விதையும் தமிழ் மண்ணில் ஊன்றப்பட்டது. பல்லவர் காலத்தில் அவ்விதை செடியாகி-மரமாகி-ஆல்போல் தழைத்துப் பக்தி இயக்கமாக உருவெடுத்தது. தமிழ் நாடு முழுவதிலும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் பரப்பிய பக்திநெறி, தமிழர் சமுதாயத்தில் பொதிகைத் தென்றலென வீசி, சமண, சாக்கியங்களின் பிடியில் சிக்கி, வெம்மையில் வாடிய தமிழ்மாந்தர் குளிர்ச்சிபெற வழிவகை செய்தது. சிவனடியார்களும் திருமாலடியார்களும் தங்கள் தேனினுமினிய நற்றமிழ் பாக்களால் தமிழ் மண்ணில் பக்திமணம் பரப்பினர். சங்ககாலத்தமிழ்ப்புலவர்கள் மாந்தரிடை நிலவிய காதலை பாடிச் சென்றதை, பக்திநெறி புகட்டவந்த சமயப் பெரியார்கள், தத்தம் வழிபடு கடவுளிடம் செலுத்திப்,பிறவிப்பெருங்கடலை நீந்தவும், வையத்துள் வாழ்வாங்கு வாழவும், சைவம் வைணவம் தழைத்தோங்கவும், தமிழர் சமயநெறி காத்திடவும் வழிவகைசெய்தனர். அவர்கள் அன்று பரப்பிய தேன் மதுர பக்தி, நூற்றுண்டு பல முடிந்திடினும், இற்றை நாளிலும் பல்கோடி மாந்தர் உள்ளங்களை மகிழ்விக்கும் தெய்வகீதங்களாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் கண்ட பக்திநெறி பல்லுயிரும் உய்ய வேண்டும் என்ற உயரிய அடிப்படையில் தோன்றியதாகும். அங்ஙனம் பக்திநெறி பரப்பிய சைவ நாயன்மார்களில் முதன்மையானவர்களுள் ஒருவரான அப்பர்அடிகளாரின் பக்திநெறி பற்றி இங்கு ஆராயப்படுகின்றது.

அப்பர் தனது வாழ்க்கை முழுவதையும் சைவநெறியில் பிணைக்கவில்லை. இறுதிக் காலத்தில்தான் சிவனடியாராக வாழ்ந்

திடும் பேறுபெற்ருர். அவரது இளமைவாழ்வுஅல்லல்நிறைந்தது. தந்தையும் தாயுமிழந்து, தமக்கைமார் திலகவதியாரின் அன்பின் அரவணைப்பில் வளர்ந்து, அவரது காவலைமீறி, சமணம் புகுந்து, தருமசேனர் எனப் பெயர்பெற்று, சூலைநோயினுள் சிக்கி அலைக்கழிக்கப்பட்டு, தமக்கையிடம் மீண்டுவந்து, அவர் காட்டிய செந்நெறியாம் சிவநெறியில் தன்னைப் பிணைத்து, நோய் நீங்கி, தனது நெஞ்சினைச் சிவபெருமானுக்குரிய இடமாக்கினுர். இதுவரையிலும் சிவபெருமானை வணங்காது வீணேகழித்தநாட்களை எண்ணிவருந்தி, “நின் திருவருள் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே” எனக் கதறினுர். எனவேதான், தன் வாழ்வின் பிற்பகுதியில் சைவரான நிலையை எண்ணி, “நாட்பட்டு வந்து பிறந்தேன்” என்றுரைத்தார். எனினும் தான் சைவமேகியது முழுமுதல்வனின் திருவருளே என்றுணர்ந்து, தனது எஞ்சிய நாட்கள் முழுவதையும், பெரியோன் புகழ்பரவி சைவநெறி தழைத்தோங்கத்திருப்பணிசெய்தார். நாவினுக்கரசராய்விளங்கி திருத்தலங்கள் தோறும் சென்று, அவ்வத்தலங்களில் உறையும் இறைவனைப் போற்றி, திருவாய் மலர்ந்தருளியதுடன் மட்டுமல்லாது, உழவாரப்படை ஏந்தி திருக்கோயில்கள் அழகுறத் திகழும்வண்ணம் திருத்தொண்டாற்றினுர். உடல்பொருள் ஆவி மூன்றினையும் இறைவனுக்கே உரித்தாக்கி, அவர் நடத்திய பக்தி இயக்கம் சமணம், சாக்கியம்பால் ஈர்க்கப்பட்ட மக்களை மீட்டு வரச் செய்ததுடன் – அவர் காலத்தில் அரசோச்சிய பல்லவமன்னன்மகேந்திரவர்மனையும் சைவநெறிக்குக்கொண்டு வந்ததுடன் – அரசுக் கட்டிலில் கோலோச்சிய சமணத்தை இறக்கி. சைவநெறியினை இடம்பெறவும் செய்தது. அப்பரது பக்திநெறி தமிழர் சமயவாழ்வினில் ஒரு புதிய சகாப்தத்தினை ஏற்படுத்தியது என்றே கூறலாம்.

அப்பர் இறைவன்பால் கொண்டிருந்த பக்தி, எழுத்தில் வடிக்க இயலாததாகும். சிவனைத் தன்நெஞ்சினில் இருத்தி, இரவுபகலின்றி எந்நேரமும் வணங்கும் இயல்புடையாராய் வாழ்ந்தார். சிந்தையுட் சிவனுய் நின்ற உருவினனைக் கண்டு கொண்ட பாங்கினை உணர்ந்து மகிழ்ந்தார். தனக்கு தாய் தந்தை எல்லாமே எம்பெருமான்தான் எள்று போற்றிப் பாடினுர். அவர் கண்ட ஒரே தெய்வம் சிவபெருமானே. ஈசன் என்று என்றென்றும் அரற்றிக் கொள்பவராய் விளங்கினுர். பிறதெய்வத்தை அவர் ஒருசிறிதேனும் நினைத்துப் பார்க்காதவராய் வாழ்ந்தார்

அப்பர் இறைவனை அங்கிங்கெனுதபடி எங்கிலும் கண்டார். நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம், திங்கள், ஞாயிறு, ஆன்மா

என்று எட்டுமாய் – அட்டமூர்த்தியாய் நோக்கினர். இறைவனே முத்தமிழும் நான் மறையுமாய் விளங்கி நிற்கின்றான் என்றுணர்ந் தார். ஈகையில்கூட, இரப்பவர்களுக்கு ஈயவைப்பவனும், ஈபவர்களுக்குரிய அருட்குணமும்கூட ஈசனருளாகத்தான் அவருக்குத் தென்பட்டது

இப்பிறப்பில் மட்டுமின்றி, மேலும் பிறப்பெய்தினலும் வரும் ஏழு பிறப்பிலும் உனக்கடியாராய்ப் பணிசெய்வன். என மன்ருடினர். தான் புழுவாகப் பிறந்தால்கூட இறைவன் திருவடியை மறவா இயல்பினைத்தரவேண்டும் என்பது அவர் கேட்ட வரம். சிவனைவிடுத்து ஒரு கணம்கூட அவரால் இருக்கமுடியாத இயல்பினை உணர்த்துகிறது. எனவேதான் " ஐம்புலனும் அகத் தடக்கி எப்போதும் இனியானை என்மனத்துள்ளே வைத் தேனே " என்று கூறினர்

சமணம் புகுந்து, தான்பெற்ற சூலை நோயிலிருந்து தன்னைக் காத்தருளிய பிணிதீர்க்கும் மருத்துவனை – தேடொணுத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன் எனமகிழ்ந்த அப்பரடிகள், உலக மாந்தரை நோக்கி, " கட்டராய் நின்று வீணே காலத்தைப் போக்கவேண்டாம், இவ்வுலகு அருமை யானதெனக் கருதி 'வெறுமையில்' வாழ்ந்து வினைகளால் நலிவு பெறவேண்டாம்! நீங்கள் உங்கள் அல்லலைக்கடக்கவேண்டில் அரனுகிய எம்பெருமானையே நினைமின்'' என்றுஉபதேசித்தார்.

இறைவனிடம் தூய அன்பினராக இருத்தல் மட்டுமே உயரிய சமயநெறி என்பதைத்தெள்ளத் தெளிவாக விளக்கினர்

" கோடித் தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடி ஞலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனே டொக்குமே "

இப்பாடலில்இறைவனை அன்புமலர்கொண்டுவழிபடாதுகோடித் தீர்தம் குளித்தாலும் எவ்விதப் பயனுமின்று என்றுரைத்தார். மலையே வந்து வீழ்ந்திட்டாலும்கூட இறைவன் துணை இருக்கை யில் பயமேன்! என்று அஞ்சா மொழி பேசிய அப்பர், உலகில் பணிதற்குரிய ஒரேபொருள் சிவ பரம்பொருளே என்பதை மனதினில் கொண்டிருந்தார். எனவேதான் நாமார்க்கும் குடி யல்லோம் நமனையஞ்சோம் என்று வீரமுழக்கம் செய்தார் மேலும் சாத்திரம்பல பேசி, கோத்திரம், குலம் கொண்டு ஏற்றத் தாழ்வு உரைத்திடும் இயல்பினை இடித்துரைத்து அங்ஙனம் பேசித் திரிவோரைச் ' சழக்கர் ' என இழித்துரைத்தார் ' தொழுநோயுடையாராயினும் ஆவுரித்து தின்றுழலும் புலையரா யினும் சிவனடியாராயின் வணங்கிடும் கடவுளாகவே ' அப்பர்

கண்டார். அப்பர் அடிகளாருக்குக் காணும் பொருள், செயல் யாவையும் இறைவன் திருவுருவமாகவே தென்பட்டது. அவர் உளமெலாம் இறைவன் ஒளியாய் மதியாய் நின்றிலங்கினன்

அப்பர் கண்ட பக்திநெறியில் அங்கத்தை மண்ணுக்காக்கி, ஆர்வத்தைப் பரமனுக்குக் கொடுத்துப், பங்கத்தைப் போக மாற்றிடும் இயைபு மின்னிமிளிர்ந்தது. பக்தியால் சிவனைத் தனக்குள் கொண்டார் என்பது அவர்தம் தேவாரப் பாமலர்கள் தரும் செய்தி, சுருங்கக் கூறின், "அன்பில் அணைத்து வைத் தேனே" என்று அப்பர் அடிகளே திருவாய் மொழிந்தது போன்று, 'அன்பால் சிவனை தன்னகத்தே கொண்டார்' என்பதே முடிவாம்.

---

## கடிதம்.

* திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திவ்ய சரணங்களில் அனேக நமஸ்காரங்களுடன், அடியேன் ஆங்கீரஸ சர்மா, சமர்ப்பித்துக் கொள்ளும் விக்ஞாபனம். *

அடியேன் 6—9—83 ஞாயிறு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளுபதேசக் கூட்டத்தில் கலந்துகொண்டது பெரும்பேருகக்கருதுகிறேன். இதுகாறும் எத்தனையோ ஆண்டு களாகப் பெரியபுராணம் சொற்பொழிவுகள் அடியேன் செய்தி ருப்பினும் இதுவரை அடியேன் அறியாத விளக்கங்கள் இயற்பகை நாயனூர் வரலாற்றில் அறிந்தேன். மற்றும் உரிய திருக்குறள் விளக்கங்கள், தேவாரத் திருப்பாடல்களின் விளக் கமும் சிந்தனைக்கு நல் விருந்தாயமைந்தது. *

இம்மாத உபதேசத்தின் சாரமாக "நெஞ்சம் நிறைந்தது" என்ற தலைப்பில் புலவர் திரு. கா. ம. கண்ணப்பன் அவர்களது கட்டுரை, அடியேனது நெஞ்சத்தைமட்டுமல்லாமல் அனைவரது நெஞ்சத்தையும் நிறைவிக்கும் என்பதில் ஐயமில்லை. அடியேன் நேரில் இருந்து கேட்டவனுகலின், திரு. கா. ம. கண்ணப்பன் அவர்களது கட்டுரை, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது அருளுபதேசத்தைச் சிறிதும் வழுவின்றி அப்படியே சாரமாக வடித்துத்தந்திருப்பதை நன்கு சுவைக்க முடிந்தது. இம்மாதிரி உபதேசக் கட்டுரைகள் மாதந்தோறும் தொடர்ந்துவரவேண்டு மென்பது அடியேனது பிரார்த்தனை. *

14—3—1983. **ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா.**

# வையத்தை வாழ்விக்கவா !

**திரு. அரங்க. முத்துமணி**
மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), தஞ்சாவூர் - 1.

**(வெண்பா)**

வான்போல் தமிழும் வளர்சைவ நன்னெறியும்
தான்கொண் டிலங்கும் தருமையிலே — சான்றோர்தாம்
ஏத்தும்சீர் சண்முகப்பேர் ஏந்தல் அடிமலர்கள்
பூந்தனவே என்மனப்பூங் கா.

**(வேறு)**

அருணனும் கிழக்கு வானில்
ஆயிரம் கரங்கள் நீட்டி
இருட்டினை விலக்க எண்ணி
எழுகின்ற காலை போல,
மருட்டிய துன்ப மெல்லாம்
மறைந்திட, ஒளியே காட்டி
வருகின்ற ருத்ரோத் காரி
வையத்தில், வளத்தைச் செய்க!

தேன்மழை "மேக ராகக்
குறிஞ்சி"யைத் தேடாக் காலே,
வான்மழை வருமோ ? என்றும்
வறட்சியும் போமோ ? யாண்டும்
தான்கொண்ட கொள்கை தானே
தலையென்று கொண்டி டாமல்
மான்கொண்ட பெருமான் பாத
மலரடி வணங்க வேண்டும் !

எனவே

தெய்வ மணம்கமழத் தித்திக்கும் புத்தாண்டே!
வையத்தை வாழ்விக்க வா !

# வேம்பு

**தஞ்சை. திரு. நா. தனுக்கோடி,**

மருத்துவ அலுவலர், திருநெய்ப்பேர். 610103

வேம்பு அன்னைபராசக்தி மாரியம்மனின் அம்சமாக போற்றப்படும் கற்பமூலிகை. வேப்பங்கனியை உண்பதனால் தான் காகங்கள் நீண்டநாள்வாழ்கின்றனஎன்றுகூடச்சொல்லத் தோன்றுகிறது. வேம்பில் பல வகைகள் உள. இங்கு நாட்டு வேம்பே எடுத்துக்கொள்ளப்பட்டது. மரங்கள் முதிருந்தோறும் ஆற்றல்மிகும். நூறு ஆண்டுகள் சென்ற வேம்பு சிறந்த பயன் விளைவிப்பதாக இருக்கிறது.

நாடோறும் உணவுக்குமுன் முதிர்ந்த வேப்பமரத்தின் கொழுந்திலையில் ஒருபிடி உண்டு வந்தால் வாதம், சூலை, சுரம், சன்னி, சிரங்கு, மேகம், குட்டம் முதலிய நோய்கள் அணுகா, கடிவிடங்கள் ஏற்கமாட்டா, ஆயுள் நீட்சியுண்டாம்.

சுரம், குளிர் நடுக்கங்களுக்கு:- வேம்பம்பட்டை, திரிகடுகு, நிலவேம்பு இவற்றை நேரெடை கொண்டு கியாழஞ் செய்து உட்கொள்க, இத்துடன் அவுரிவேரும், துளசிவேரும் சேர்த்து கியாழஞ்செய்து உட்கொண்டுவரின் எவ்வகைப்பட்ட முறை சுரமும் நிற்கும்.

சன்னிக்கு:- வேம்பு, தேவதாரம், அவுரி, சதகுப்பை, பூண்டு, இஞ்சி இவற்றைத் தூள்செய்து வேப்பநெய்யிலிட்டுக் காச்சி அந்த நெய்யில் துட்டெடை உட்கொள்ளவும்.

வாதம், சூலைகட்கு:- வேம்பம்பட்டை, தேவதாரம், மாவலிங்கம்பட்டை, திரிகடுகு நேரெடை கொண்டு கியழஞ்செய்து உட்கொள்க, இத்துடன் எருக்கம் வேர்சேர்த்து வேப்பெண்ணெயில் கலந்து காச்சி உடம்பிற்பூசி வரவும்.

கணைகளுக்கு:- வேப்பம்பட்டை, திரிகடுகு, மதுரம், நேரெடை கொண்டு கியாழஞ்செய்து உட்கொள்ளவும்.

வயிற்றுநோய் கிருமிகட்கு:- வேப்பிலை கொழுந்தும், பாகல இலையும், தேங்காய்ப்பாலில் அறைத்துப் பிழிந்த சாற்றில் சங்களவுபுகட்டலாம். குழந்தைகளின் உடல் வலிவுக்கு ஏற்ப உட்கொள்ளலாம்.

சூதகநோய்களுக்கு:- வேப்பிலைக் கொழுந்து, பூண்டு, திப்பிலி, காயம், நேரெடை அறைத்து வெல்லம் சேர்த்து கழற்சி அளவு உட்கொள்ளவும்.

வாயுக்களுக்கு:- வேப்பிலைக் கொழுந்து, பூண்டு, காயம், வாய்விளங்கம், திரிகடுகு, ஓமம் நேரெடை அறைத்து காசெடை இந்துப்பு சேர்த்துப்பாக்களவு உட்கொள்ளவும்.

மலட்டுநோய்க்கு:- வேப்பங்கொழுந்து, கரிபானிலை, கீழ் காய்நெல்லி, குமட்டித்தோடு, மஞ்சள், பூண்டு, காயம், ஓமம், கடுகு, நேரெடைகொண்டு அறைத்து வெல்லஞ் சேர்த்து மாதவிடாய் கண்ட நாள் முதல் நான்குநாள் பாக்களவு, நாளிரு வேளை உட்கொள்ளவும்.

இருமல், காசம் முதலிய கபநோய்களுக்கு:- வேப்பம் பட்டை, தேவதாரு, திரிகடுகு, அரத்தை, அக்கராகாரம், சதகுப்பை நேரெடை கியாழஞ்செய்து உட்கொண்டு வருக, இத்துடன் ஆடாதோடை, தூதுவேளை, கண்டகாரி மூன்றும் நேரெடைசேர்த்துப்பாலில்கியாழஞ்செய்தும்உட்கொள்ளலாம்.

சிரங்கு, குட்டசரும நோய்களுக்கு:- வேப்பம்பட்டை, கருஞ்சீரகம், கருகாலிப்பட்டை, விலாமிச்சுவேர், வசம்பு, குக்கில், அவுரிவேர் நேரெடைகொண்டு அறைத்து நீரடிமுத் தெண்ணெயில் கலந்து காய்ச்சி மேல் பூசிவருக. வேப்பம் பட்டை, மதுரம், கருஞ்சீரகம், அமுக்கிரா, பரங்கிபட்டை, அவுரி, கார்கோலரிசி, குக்கில் நேரெடை கியாழஞ்செய்து உட்கொண்டு வரவும்.

தலைநோய்க்கு:- வேப்பம்பட்டை, தேவதாரம், கிராம்பு சாம்பிராணி, இஞ்சி, தைவேளை இலை நேரெடைகொண்டு வெப் பெண்ணெயிலிட்டுக்காய்ச்சி நோயுள்ளஇடத்தில்பூசவும். மாதம் இருமுறைஇவ்வெண்ணெய் தலையில் தேய்த்து முழுகுதலுமாம்.

உடல் அரிப்புக்கு:- வேப்பிலை நிறைய இட்டு கொதிக்க வைத்தநீரில் தொடர்ந்து தலைமுழுகினல் அல்லது குளித்தால் உடலில் திடிர் என தோன்றும் அரிப்புகள் குணமாகும்.

வேம்பினுல் உண்டாகும் பயன் இன்னும் பல. அவற்றை ஈண்டு விரிப்பிற்பெருகும். (இம்மருந்துகளைச் செய்து பயன் கண்டவர்கள் எமக்கு அறிவிக்கும்படி வேண்டுகிறேம்).

### அவர் நமக்கேன் ?

வருந்தும் நோய்வந்தவுடன் வாழோமென்று ணர்ந்தவுடன்
மருந்தரையும், கடவுளையும், கருத்துடனே போற்றிடுவோம்
வருத்தியநோய் தீர்ந்தவுடன் வாழ்வோமென்றறிந்தவுடன்
மருத்தரையும், கடவுளையும் மறந்திடுவோம்! அவர்நமக்கேன்?

— சித்த இளம்பூரணர்

## நல்ல தமிழ்

'ஜன்னல்' என்ற சொல்லுக்கு பலகணி, சாளரம், காலதர் என்ற மூன்று அருமையான தமிழ் சொற்கள் இருக்கின்றன. ஜன்னல் என்பது போர்ச்சுகீசிய மொழிச்சொல்.

'வென்டிலேட்டர்' காலதர் என அழைக்கப்படுகிறது. கால் – காற்று; அதர் - வழி; காற்றுவந்து புழங்குவதற்கானவழி.

ஃபைல் (File) - கோப்பு; மெயின்ஃபைல் - தலைக்கோப்பு; லிங்க்ஃபைல்–இணைப்புக்கோப்பு; ரொட்டீன்ஃபைல்–வாலாயக் கோப்பு; கர்ரெண்ட்ஃபைல்–நடப்புக்கோப்பு; ரன்னிஸ்ஃபைல் –ஓட்டக்கோப்பு அல்லது தொடர் கோப்பு; "கான்வாஸ்" - ஆதரவு நாடுபவர் - ஆள் நாடுபவர்.

## உயிர் அழிவதில்லை

வாழ்வில் விபத்தாலோ நோயாலோ உடலில் ஊனம் ஏற்பட்டால், இறந்தபிறகு, ஆவி உடலில் அந்த ஊனம் ஏற்படுவதில்லை என்பது சமீபத்திய ஆராய்ச்சியாளர்களின் முடிவு. உடலைவிட்டு உயிர் வெளிவந்தபிறகு நோவு இல்லை; வேதனையும் இல்லை; சுகமான வெதுவெதுப்பான நீரில் மிதப்பதுபோல இருக்குமாம்.

நன்றி —மஞ்சரி மார்ச்சு 83.

உ

# எதிர்காலம்

★

**ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்**

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(ருத்ரோத்காரி௵ சித்திரை௴ 1௳ முதல் 31௳ முடிய)

(14—4—1983 முதல் 14—5—1983 முடிய)

| | | | |
|---|---|---|---|
| ல/ | சூ செ பு சந் | சுக் | ரா |
| | இராசி | | |
| | | | |
| கே | கு | சனி | |

| | | | |
|---|---|---|---|
| | கு | சந் கே | |
| ல/ சு | அம்ஸம் | | |
| | | | செ |
| கு | சனி ராகு | | பு |

கலியுகாப்தம் 5084 ருத்ரோத்காரி௵ கலி சுத்ததினம் 1856972 நாள் 59 நாழிகை 3$\frac{3}{4}$விநாடி. இதில்விநாடி அர்த்தாதிகம் ஒன்ருகசேர்க்க வருகிறவிநாடி 4. இத்தினங்களை 7 ஆல்வகுத்து வருகிற மீதிதினம் சுக்கிராதியாக எண்ண வருகிறவாரம் 59 நாழிகை 4 விநாடிக்கு மீன லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் மீன ராசியிலிருந்து மேஷ ராசி சங்கிரமணமாக சௌரமான வர்த்தமான ருத்திரோத்காரி ௵ சித்திரை மாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். சௌரமான வருஷாதிபதி குரு பகவான் ஆகிருர். அன்றே சைத்திர சுத்த பிரதமை, குருபக வானே ருத்ரோத்காரி வருஷத்துக்கு இராஜாவும் மந்திரியுமாகி உலகத்தை இரட்சிப்பவர் ஆகிருர்.

ஆகவே இவ்வாண்டில் நல்ல மழை பெய்து வனம்காடுகள் விளை நிலங்களில் பயிர்கள் செழித்து உணவுதானியங்கள் விருத்தியாகி மாந்தர்கள் கால் நடைகளுக்கு நல்ல போஷாக்கு

தரும். லோகில் அரசர்கள் நீதியை அறிந்து நல்ல வழியில் பிரஜைகளை செலுத்துவர். பசுக்கள் பால் நிறையகறந்து பால்பண்டங்கள் குழந்தை உணவுகள் மிகுந்துகிடைக்கும். லோகில் பிரஜைகள் க்ஷேமத்துடன் ஆரோக்கியமாக வாழ்வார்கள். தேசங்களில் எங்கும் ஆன்ரோர்களால் சிவதர்மகாரியங்கள், ஆலயத்திருப்பணிகள், பொதுநல புண்ணியகாரியங்கள் நடக்கும். எல்லா பிரஜைகளும் ஈஸ்வரனருளிய ஜீவனோபாயம் கிடைக்கப்பெற்று நல் உழைப்பு மேற்கொண்டு உய்வார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பரமாசாரிய சுவாமிகளாகத் திகழ்கின்ற சிவஞான குருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் லோகமாந்தர்களில் அஞ்ஞானம் நீங்கி பிரகாசிக்க அனுக்கிரகித்து, சாத்திரஞானம், கலைக்ஞானம். சிவாசார நியமம், தெய்வபக்தி, மனத்தூய்மை, நற்செய்கை ஆகியவற்றின் உயர்வு இயம்பி, நன்மார்க்கமடைய ஆசிஅருள் வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறு காலபூசைகள் லோகோபகார சைத்ரோத்ஸவங்கள் ஆலய நிர்வாக புண்ணிய ஜீலர்களின் அரிய சாதனையில் விமரிசையாய் நடைபெறும். பஞ்சமூர்த்திகளின் வீதியுலாக்காட்சி சிறப்புறும். எல்லா பிரஜைகளும் தெய்வதரிசனம் செய்து மனம் தெளிந்து இனிது வாழ்வார்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – ¼
(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். பணவருமானம் பெருமதிப்பில் வந்துகொண்டிருக்கும். வாக்கு மேன்மை மேடைப் பிரசங்கக்கீர்த்தியையளிக்கும். பொதுநலகாரியங்களை ஏற்று நடந்துதல் ஆகும். நீர் இயந்திர சாதனம் வாங்குதல் ஆகும். எல்லாகாரியங்களும் தெய்வபலத்தில் வீறுடன் நடந்து கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின்சௌக்கியம் நன்றாகஇருந்து வரும். ஏப்ரல் 14, 15, 18, 19, 24, 25, 26, 27, 28 மே 4, 5, 6, 7, 11, 12 தேதிகளில் தனுதாயம் காரியஜெயம் உற்சாகம்ஏற்படும். ஏப்ரல் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

ருத்ரோத்காரி ௵ இராசி ஆதாயம் 11, விரயம் 5, ஆரோக்கியம் 0, அனுரோக்கியம் 4, இராஜபூதிகம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½
( இ ஊ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ. )

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் வரும். நெருக்கடி பிரச்சினைகளில் செலவையும் ஏற்படுத்தும். வித்தியா வியாபாராதிகளில் விளம்பரமும் முதலீடும் ஆகும். நவீனவாகனம் வாங்குதல் ஆகும். எல்லா காரியங்களையும் வெற்றியாக நடத்திக்கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தான தர்மங்களுடன் நடந்துவரும். ஏப்ரல் 16, 17, 20, 21, 27, 28, 29, 30 மே 6, 7, 8, 9, 10, 13, 14 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். மே 1, 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

ருத்ரோத்காரி ஸ்ரீ இராசி ஆதாயம் 5, விரயம் 14, ஆரோக்கியம் 4, அனுரோக்கியம் 5, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾
( கா. கி. – கு. க. ஸ. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுன ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் நல்ல தனவருமானம் வந்துகொண்டிருக்கும். பூஷணங்களின் பிராப்தியை யளிக்கும். வீடு வாகனம் நவீனம் பொருந்தி அனுபோகம்தரும். வித்தியாவியாபாராதிகளில் கலைத் துறையில் முன்னேற்றஸ்திதியாகும். ஸ்திரி புத்திரி இவர்கள் நலனில் செலவுமிகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஏப்ரல் 14, 15 18, 19, 22, 23, 29, 30 மே 1, 2, 3, 9, 10, 11, 12தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். மே 4, 5, தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

ருத்திரோத்காரி ஸ்ரீ இராசி ஆதாயம் 8, விரயம் 11, ஆரோக்கியம் 6, அனுரோக்கியம் 6, இராஜபூஜிதம் 0, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.
( ஹி. – ஹு. ஹே. ஹோ, ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவரவுகள் கணிசமாக வந்துகொண்டிருக்கும். புதியவாகன பிராப்தியையளிக்கும். நீர் இயந்திரசாதனங்களில்

நல்லன ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரசித்தம் ஆகும். எல்லாகாரியங்களையும் இராசரீகமாகநடத்திவரும். தாரபுத்திரர்களின்சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 14, 15, 16, 17, 20, 21 24, 25, 26, மே 1, 2, 3, 4, 5, 11, 12, 13, 14 தேதிகளில் தனுதிசௌக்கியம், தெய்வதரிசனம் விசேஷ நன்மைகள் ஏற்படும். ஏப்ரல் 6, 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

ருத்திரோத்காரி ஹு இராசி ஆதாயம் 8, விரயம் 2, ஆரோக்கியம் 0, அனுரோக்கியம் 3, இராஜபூதிகம் 6, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9பாதங்களும் மிச்சிரபலனுகநடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்திவரும். நேர்மை உறுதி ஆகியமனேலயனில் எல்லாகாரியங்களையும் செம்மையாக நடத்திவரும். வீடுவாகனங்களில் நல்லசௌகரியம் தரும். புத்திரனுக்கு மேன்மைஸ்திதியளிக்கும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தான தர்மங்களுடன் நடந்துவரும். ஏப்ரல் 16, 17 18, 19 22, 23, 26, 27, 28 மே 4, 5, 6, 7, 8, 13, 14 தேதிகளில் தனுதாயம் காரிய மேன்மை விசேஷ நன்மைகளை ஏற்படுத்தும். மே 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

ருத்திரோத்காரி ஹு இராசி ஆதாயம் 5, விரயம் 6, ஆரோக்கியம் 1, அனுரோக்கியம் 1, இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 1, சுகம் 6, துக்கம் 1.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் நல்ல தனவருமானம் வந்து நிறையும். சகோதரருக்கு உஷ்ண நலிவு ஏற்பட்டு குணமாகும். பூர்வ சொத்து பிராப்தியில் நல்லன வந்துசேரும். பெற்ருேர் சுகம் நன்ருக இருந்துவரும். சாஸ்திரோக்தமாக எல்லா காரியங்களையும் செய்யும். அரசாங்க தொடர்புள்ள விஷயங்களில் நன்மைகள் ஏற்பட்டுவரும். ஏப்ரல் 18, 19, 20, 21, 25, 26, 29, 30 மே 6, 7, 8, 9, 10 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும்.

ஏப்ரல் 14, 15 மே 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

ருத்ரோத்காரி ஷ இராசி ஆதாயம் 8, விரயம் 11, ஆரோக்கியம் 6, அனுரோக்கியம் 6, இரர்ஜபூஜிதம் 0, இராஜகோரம் 5, சுகம் 6, துக்கம் 5.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾
(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல தனவருமானம் வந்து கொண்டிருக்கும். சகோதரருக்கு அரசாங்க நன்மைகளை ஏற்படுத்தும் வீடுவாகனங்களில் நல்லசௌகரியம் இருந்துவரும். பூமியில் இயந்திரங்களில் பணம் முடங்கும். தாரசௌகரியம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 14, 15, 20, 21, 22, 23, 26, 27, 28 மே 1, 2, 3, 9, 10, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஏப்ரல் 16, 17 மே 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

ருத்ரோத்காரி ஷ இராசி ஆதாயம் 5, விரயம் 14, ஆரோக்கியம் 4, அனுரோக்கியம 5, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.
(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் நலம் வீடு மனைகளில் அவசிய செலவும் ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நன்மைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். எத்தனித்த காரியங்களில் விருத்திநிலைமை காணும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 14, 15, 16, 17, 22, 23, 24, 25, 29. 30 மே 4, 5, 12, 13, 14 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். எப்ரல் 18, 19 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

ருத்ரோத்காரி ஷ இராசி ஆதாயம் 11, விரயம் 5, ஆரோக்கியம் 0, அனுரோக்கியம் 4, இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

( யே, யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பணவருமானத்தில் நல்லஸ்திதியை ஏற்படுத்திவரும். அரசாங்க காரியங்களில் வெளியில் அடிக்கடி அலேச்சல் ஆகும். சகோதரர் பெற்ருேர் நலன்களில் ஓர் அளவு பொருள்முடங்கும். ஞாயிற்றுக் கிழமைசூரியார்ச்சனைசெய்ய அலேச்சல்ஆயாசம் நீங்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 16, 17, 18, 19, 24, 25, 27, 28 மே 1, 2, 3, 6, 7, 12, 13, 14 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களேயளிக்கும். ஏப்ரல் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

ருத்ரோத்காரி ஸு இராசி ஆதாயம் 14, விரயம் 11, ஆரோக்கியம் 5, அனுரோக்கியம் 2, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் வெகுவாகவரும். நெருங்கிய தொடர்புடைய ஒருவர் மனத்தாங்களில் விலகுவர். வீடுவாகன பிராப்தியில் நவீன ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் வித்தியா வியாபாராதிகளில் கலேத்துறையில் முன்னேற்ற ஸ்திதியாகும். புத்திரர் அல்லது புத்திரிக்கு சுபம்தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஏப்ரல் 18, 19, 20. 21, 27, 28, 29, 30 மே 4, 5, 9, 10 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களேயளிக்கும். ஏப்ரல் 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

ருத்ரோத்காரி ஸு இராசி ஆதாயம் 2, விரயம் 8, ஆரோக்கியம் 6, அனுரோக்கியம் 4, இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

( கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். பணவருமானம் கணிசமாக வரும். ஜீவனேபாயம் தொழில் துறைகளில் முன்னேற்ற ஸ்திதியாகும். வாகனசுகம் திருப்தியளிக்கும். நீர்

இயந்திர சாதனம் வாங்குதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்முக இருந்துவரும். ஏப்ரல் 14, 15, 20, 21, 22, 23, 29, மே 1, 2, 3, 6, 7, 11, 12 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஏப்ரல் 24, 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

ருத்ரோத்காரி ஸ்ரீ இராசி ஆதாயம் 2, விரயம் 8, ஆரோக்கியம் 6, அனுரோக்கியம் 4, இராஜபூஜிதம் 4, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 3

12. மீனம்:- பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.

( தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )

மீனராசி9 பாதங்களும் நற்பலன்தரும். பணவசதிபெருகும். மற்றவருக்கு உறுதிவாக்களித்தல் நிறைவேற்றுதல் ஆகும். வீடுவாகனங்களில் சீர்திருத்தம் ஆகும். நவீன பொருள்களின் சேர்க்கையை ஏற்படுத்தும். நடக்காததுபோல் உள்ள காரியங்களில் முடிவில் சாதகம் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம், நன்முக இருந்துவரும். ஏப்ரல் 17, 18, 22, 23, 24, 25, மே 1, 2, 3 4, 5, 9, 10, 13, 14, தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஏப்ரல் 27, 28, தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

ருத்ரோத்காரி ஸ்ரீ இராசி ஆதாயம் 14, விரயம் 11, ஆரோக்கியம் 5, அனுரோக்கியம் 2, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 5, சுகம் 6, துக்கம் 3.


## ஆசிரியர் தேவை

தருமையாதீனம் வேத சிவாகம பாடசாலைக்கு சாஹித்ய பாடம் கற்பிக்க, சிரோமணிபட்டம் பெற்ற ஆசிரியர் ஒருவர் தேவைப்படுகிறது. ஓய்வுபெற்றவர்களும் மனு செய்துகொள்ளலாம். மற்றவை நேரில் வந்து தெரிந்துகொள்ளவும்.

முகவரி :- ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
தருமையாதீனம்
தருமபுரம், மயிலாடுதுறை-609 001

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு, பங்குனித்திங்கள் 11 ஆம் நாள் 25—3—83 வெள்ளிக்கிழமை, பாண்டியநாட்டுத் திருத்தலமாகிய திருஏடகம் திருக்கோயிலில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றக் கூட்டு வழிபாட்டுடன் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அருள்மிகு ஏடகநாதருக்கும் அருள்மிகு ஏலவார் குழலியம்மைக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடுநிகழ்வுற்றது. பணிமன்ற அன்பர்கள் திருமுறை ஓதித்திருக்கோயில் வலம்வந்தனர்; தலத் திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப் பெற்றன. திருவாளர்கள் த. குருசாமிதேசிகர், என். எஸ். சுந்தரராமன், நமசிவாயம், யாழ். திரவியம் பிள்ளை, எம். வீரபத்திரன் ஆகியோர் சமய விரிவுரை, திருமுறைப் பாராயணப் பணிகளில் பங்கேற்றனர். 'திருஏடகத் திருப்பதிகங்கள்' என்ற தலத்திருப்பதிக வெளியீடு அன்பர்கட்கு வழங்கப்பெற்றது; பக்தர்கள் பலர் விழாவிற் கலந்து கொண்டு பயனுற்றனர்.

## குருவருளும் அருளுபதேசமும்

ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று காலை சரியாக 10 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை, அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக்கூட்டம் தருமையாதீனத் திருமடத்தில் நடைபெற்று வருகின்றது. இம்மாதம் 3—4—83 அன்று 23ஆவது வழிபாட்டுக் கூட்டம் நிகழ்வுற்றது. இம்மாத அருளுபதேசத்தில் கயிலைமாமுனிவர் ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகள் கலந்துகொண்டு வழிபாடாற்றிக்கேட்டுமகிழ்ந்தார்கள். வழிபாட்டுக்கூட்டத்தின் முதல்அங்கமாகக்கூட்டுப்பிரார்த்தனைநிகழ்வுற்றது. அருளுபதேசக் கூட்டத்திற் கலந்துகொண்ட அறிஞர் திரு. மு. அருணசலம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாணையின் வண்ணம் சைவ சமயச் சிறப்புப்பற்றி விளக்கினர். சைவ சமயத்தின் தொன்மையை மொகஞ்சதரோ, ஹரப்பா ஆகியவற்றின் அகழ்வு ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளமை, அக்கால

மக்கள் சிவனை வழிபட்டமை ஆகியனபற்றி விளக்கி, வேதம், ஆகமம்பற்றிய குறிப்புக்களை எடுத்துக்கூறினர்; தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தமது உபதேசத்தில் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாக - வாழ்ந்து காட்டிய பெரியோருள் ஒருவராகிய இளையான்குடிமாற நாயனர் பற்றித் தெளிவாகவும், நகைச்சுவைதோன்றவும் விளக்கியருளினர்கள். நால்வகை வருணத்தார் தத்தம் நிலையில் தொண்டுபுரிதல் பற்றி எடுத்தியம்பி இறைவன் இளையர்ன்குடிமாற நாயனர் வீட்டை நோக்கி எழுந்தருளியமையை விளக்கும்போது " தூய்மையான ஒருவரைப்பற்றி நாட்டுக்கு அறிமுகப்படுத்தினல் நாட்டுமக்கள் அவர்வாழ்வைப் பின்பற்றிவாழ்வர் " என்னும் கருத்தை இனிய சிந்தனையாக மக்கள்உணரவேண்டிய அறிவுரையாகஉபதேசித்தார்கள். " தாளாற்றித்தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு " என்னும் குறள்நெறியை நாயனர் வரலாற்றெடு இயைத்துஉணர்த்தி தத்துவநெறிகளையும் சமயக் கோட்பாடுகளையும் தெளிவித்தார்கள். மயிலாடுதுறை நகரப் பெருமக்களும் அறிஞர்களும் அன்பர்களும் கலந்து கொண்டு பயனுற்றனர்.

அடுத்த அருளுபதேசம் 1—5—83 அன்று நிகழ்வுற இருக்கின்றது. அன்பர்கள் கலந்து கொண்டு குருவழிபாடு ஆற்றி அருளுபதேசம் பெற்றுப் பயன்பெறுவார்களாக.

குன்றக்குடி, திருவண்ணமலை ஆதீனம்

## ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குப் பாராட்டுவிழா

கீழ்த்திசை நாடுகளில் சைவ-சமயத்தூதுவராக, ஆன்மீக-கலாசாரப் பயணம் மேற்கொண்டு திரும்பிய குன்றக்குடி, திருவண்ணமலை ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி அருணசலதேசிகர் பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு 30—3—83 புதனன்று காலை 11-30 மணியளவில் ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் பாராட்டுவிழா தருமையாதீனத் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அதுபோது குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழக ஆண்டு விழாவும், விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்கள் விழாவின்போது எழுந்தருளி இருந்தார்கள். குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்குப் பொன்னடை போர்த்தி,

மாலையணிவித்துப், பாராட்டிப், பணிவுமலர் வாசித்து அளிக்கப் பெற்றது. குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தம் பயண அனுபவங்களை எடுத்து விளக்கினார்கள். கீழ்த்திசை நாட்டவரின் காலம் தவறுமை, உற்பத்திக்குக் குறைவுநேராமல் வேலை நிறுத்தம் செய்தல், சமயக் கொள்கை, குறிக்கோளுடன் பணியாற்றுதல் முதலிய பல நல்லனவற்றை எடுத்து விளக்கினார்கள்; தருமையாதீனக் கல்விநிலையங்களின் மாணவர்களும் ஆசிரியர்களும், மாயூரம் நகரப் பெருமக்களும், பத்திரிகை நிருபர்களும் விழாவிற் கலந்துகொண்டனர்.

## நாயன்மார் குருபூஜைத் திருநாள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் மாசி சதய நாளில் 13—3—83 கோச் செங்கட்சோழநாயனார் திருநாளும், பங்குனி உரோகிணிநாளில் 20—3—83 நேசநாயனார் திருநாளும், பூசநாளில் 24—3—83 முனையடுவார் நாயனார் திருநாளும், சுவாதிநாளில் 30—3—83 காரைக்காலம்மையார் திருநாளும், சதயநாளில் 9—4—83 தண்டியடிகள் திருநாளும், சிறப்பாக நடைபெற்றன. குருபூஜை நாட்களில் ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு அர்ச்சனை வழிபாடுகள் நிகழ்கின்றன. தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ. பெரியபுராணம் வாசித்து நாயன்மார் வரலாறு கூறினார். தேவார பாடசாலை ஆகமபாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அன்பர்களும் கலந்துகொண்டு பயனுற்றனர். புராண விரிவுரைக்குப்பின் அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

### திருக்கடவூரில்

## ஸ்ரீ அபிராமிபட்டர் அருள்பெறு திருநாள்

## மகந்யாச பூர்வக ஏகாதச ருத்ராபிஷேகம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் அருள்மிகு அபிராமியம்மை உடனாகிய அருள்மிகு அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமிக்கு 12—2—83 சனிக்கிழமை ஸ்ரீ அபிராமிபட்டர் அருள்பெற்ற நாளாகிய தை அமாவாசை நாளில் காலை 10 மணியளவில் மகந்யாச பூர்வகஏகாதச ருத்ராபிஷேகமும் அலங்கார ஆராதனைகளும், இரவு ஸ்ரீ அபிராமி அம்மைக்கு விசேஷ அலங்காரமும் நவசக்தி அர்ச்சனையும் அபிராமி அந்தாதி பாராயணமும் நிகழ்வுற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்

அவர்கள் எழுந்தருளி, வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட் பிரசாதம் வழங்கினார்கள். உலகநலம் கருதிய இவ்விழாவை மதுரை சிவகாமி மில் அதிபர், திரு. கருமுத்து. சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தம் உபயமாகச் செய்து வருகிறார்கள். விழாவில் அன்பர் பலர் கலந்துகொண்டு தரிசித்துப் பயன் பெற்றனர்.

## பங்குனித்திங்கட் பெருவிழா

### வேளூரில்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாத சுவாமி தேவஸ்தானத்தில் 19—3—83 சனிக்கிழமை தொடங்கிப் பத்துநாட்கள் பங்குனி உத்திரப்பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், சகோபுரக் காட்சி, திருத்தேர்விழா, தீர்த்தவிழா ஆகியவை சிறப்புத் திருநாட் களாகக் கொண்டாடப் பெற்றன. விழாவினை ஒட்டிச் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. 20—3—83 ஞாயிறு அன்று வித்துவான் திரு. மு. முருகையா தேசிகர் 'மெய்ப்பொருள் நாயனார்' பற்றியும் 21—3—83 திங்களன்று புலவர் திரு. மு. சிவச் சந்திரன் எம். ஏ., பி. எட்., 'திலகவதியார்' பற்றியும் உரை யாற்றினர். 22—3—83 செவ்வாயன்று திருமுறை விழாவும் தேவாரவகுப்பு ஆண்டுவிழாவும் நிகழ்வுற்றது; தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள் உரையாற்றினார். 23—3—83 புதன் அன்று புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., பி. எட் 'மங்கையர்க்கரசியார்' பற்றியும் 24—3—83 வியாழனன்று வித்துவான் திரு. மு. கோவிந்தராசன், 'சேரமான் பெருமாள் நாயனார்' பற்றியும் உரையாற்றினார்கள். திருமுறை திருவிழா நாளில் பண்ணிசைவாணர்களின் திருமுறைப்பாராயணத்துடன் திருமுறைகள் யானைமேல் திருவீதியுலா நடைபெற்றது. அன்பர் பலர் சுவாமிதரிசனம்செய்தும் விரிவுரைகேட்டும் பயனுற்றனர்.

### திருபுவனத்தில்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்ப கரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 19—3—83 சனிக்கிழமை தொடங்கிப் பத்துநாட்கள் பங்குனி உத்திரப்பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், தன்னைத்தான் அருச்சித்தில், சகோபுரக்காட்சி, திருக்கல்யாணவிழா, திருத் தேர்விழா ஆகிய சிறப்புவிழா நாட்களில் பெருந்திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து பயன் பெற்றனர். விழா நாட்களில் 21—3—83 அன்று வித்துவான் திரு. சொ. முத்தையன் எம் ஏ., 'திருநீலகண்டர்'பற்றியும் 22—3—83 அன்று வித்துவான்

திருமதி. ப. நீலா எம் ஏ., 'சிறுத்தொண்டர்' பற்றியும் உரையாற்றினர்கள். 23—3—83 அன்று தேவார வகுப்பு ஆண்டு விழா நாளில் திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., பரிசுகள்வழங்கி தலைமையுரையாற்றினர்கள். 24—3—83 அன்று வித்துவான் திரு. மு. வைத்திய நாதன் 'கண்ணப்பர்' பற்றியும் சமய விரிவுரை ஆற்றினர். திருமுறை திருவிழா நாளில் திருமுறைகள் அலங்கரிக்கப்பட்டு யானைமேல்வைக்கப்பெற்றுத் திருவீதியுலா, பண்ணிசைவாணரின் பாராயணத்துடன் நடைபெற்றது. அன்பர்கள் வழிபட்டும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

## திருபுவனம் தேவஸ்தானத்தில்
## ஸ்ரீ சரபர் உற்சவமும் ஏகதின லட்சார்ச்சனையும்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி திருக்கோயிலில் எழுந்தருளி அருள்வழங்கும் ஸ்ரீ சரபருக்கு 3—4—83 ஞாயிறன்று சிறப்புத் திருவிழாவும் ஏகதின லட்சார்ச்சனையும் நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. ஸ்ரீ கம்பகரேசுவரருக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையும் நடைபெற்றன. இரவு வெள்ளிரதத்தில் ஸ்ரீ சரபர் திருவீதியுலா சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ சரபமூர்த்திக்கு 2—9—1973 அன்று தொடங்கி நடைபெற்றுவரும் கோடி அருச்சனையில் 3—4—83 அன்று நிகழ்வுற்றது 77 ஆவது ஏகதின லட்சார்ச்சனையாகும். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சரபர் உற்சவநாளில் எழுந்தருளி, வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியருளினர்கள்.

## பேரளத்தில்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்பு நாத சுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாதத் திருநாள் 28—3—83 திங்களன்று ஏகதின உற்சவமாகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், அக்னி புஷ்கரணி தீர்த்தத்தில் தீர்த்தம்கொடுத்தருளலும், இரவு திருவீதியுலாவும் நிகழ்வுற்றன. மாலை 7 மணியளவில் தருமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., 'பார்வதி திருமணம்' பற்றி விரிவுரையாற்றினர். அன்பர்கள் சுவாமி தரிசனம் செய்தும் சொற்பொழிவு கேட்டும் பயனுற்றனர்.

## திருவையாறு திருக்கோயிலில்
## நந்தியெம்பெருமான் திருக்கல்யாண விழா

சிலாத முனிவரின் புதல்வராய்த் தவப்பயனுல் அவதரித்து, தவம் இயற்றிய நந்திதேவருக்கு இறைவன் கங்கை நீர் முதலிய ஐந்துவகை நீராலும் அபிஷேகம் பண்ணிவைத்து, தீட்சை செய்து, திருமழபாடிக்கு எழுந்தருளி, வசிஷ்டமுனிவரின் மகள் சுயசாம்பிகையைத் திருமணம் செய்வித்தருளிப் பஞ்ச பூதப் பிரதட்சிணமாகத் திருவையாற்றுக்கு வரும் திருவிழா 23—3—83 புதன் கிழமையன்று தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்பர் பலரும் வந்திருந்து நந்தி யெம்பெருமான் திருக்கல்யாணத் திருவிழாவிற்கலந்துகொண்டு தரிசித்துப் பயன் பெற்றனர்.

## சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம்
## 1983 – பிப்ரவரி

### நாயன்மார் குருபூஜை

சண்டேசுவர நாயனுர், திருநீலகண்ட நாயனுர் இவர் களின் குருபூஜைவிழா முறையே 1—2—83, 5—2—83 தேதிகளில் நிலையபூஜைமடத்தில் நடைபெற்றது. புலவர் திரு. K. ஆறுமுகம் பெரிய புராணம் வாசித்து விளக்கவுரை நிகழ்த்தினுர்கள். ஸ்ரீஅப்பர் குருகுலமாணவர்களும், நிலைய அன்பர்களும்கேட்டுப் பயன்பெற்றனர்.

### சோமவாரக் கயிலைப் பிரார்த்தனை

1983 பிப்ரவரி 7, 14, 21, 28 ஆகிய சோமவாரத் தேதிகளில் நிலைய பூஜைமடத்தில் கயிலைப் பிரார்த்தனை நடைபெறுகிறது. நிலைய ஓதுவார் ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களுடன், கயிலைப் பதிகங்கள்பாடித், தீபாராதனை செய்து, பஞ்சபுராணம்பாடி, வழிபாடு செய்யப்பெற்றது. பிரார்த்தனையில் நிலைய அன்பர் களும் கலந்துகொண்டார்கள்.

### கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

இவ்விழா 21—2—83 திங்கட்கிழமை மாலை நிலையத்தில் நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு நிலைய ஓதுவார் திரு. T. S. தண்டபாணி தேசிகரும், திரு. N. இராமமூர்த்தி அய்யரும் வேளூர்ப் பதிகங் களும், முருகன் நாமாவளிகளும் பாராயணம் செய்தார்கள். விழாவில் சிறப்புரையாற்றிய திரு. V. சேகர் பேசியதன் சுருக்கமாவது:- புள்ளிருக்குவேளூர் தேவாரத்தை இசையுடன்

பாடி, அதில் இறைவன் யானையை உரித்த காட்சியை அப்பர் சுவாமிகள் கூறியுள்ளார்கள். அதற்கு ஏற்ற தலம் வழுவூர் என்பதாகும். தாருகாவனத்து முனிவர்கள் இறைவனைக் கொல்லுவதற்காக அனுப்பிய யானையையே இறைவன் உரித்து தோலைப் போர்த்தான் என்று வருகிறது. இன்றைய தினம் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழாவிலே முருகனைப்பற்றிக் கூருவிட்டாலும், ஐம்முகச் சிவனுகிய சிவபெருமானைக் கூறினுல் அறுமுகப்பெருமானை வாழ்த்திய பெருமை நமக்குக்கிடைக்கும் சிவனுக்கும் முருகனுக்கும் பேதம் இல்லையென்று கச்சியப்ப சுவாமிகள் விளக்குமிடத்து முருகனை அறுமுகச்சிவன் என்று கூறுகிருர், ஆதலின் முருகனை வாழ்த்திய பெருமை நமக்கு இயல்பாகக் கிடைக்கிறது.

## மாதாந்திர சமயப் பிரச்சார வழிபாடு

இவ்வழிபாடு 27—2—83 ஞாயிற்றுக் கிழமை மாலை சென்னை கோடம்பாக்கம் புலியூர் ஸ்ரீ பாரத்வாஜேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது. சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்யப்பெற்றது. இதரமூர்த்திகளுக்கு அர்ச்சனை செய்யப்பெற்றது. வழிபாட்டின் போது நிலைய ஓதுவார் திரு. T. S. தண்டபாணி, திரு. N. இராமலிங்கம், திரு N. இராம மூர்த்தி அய்யர் ஆகியோர் திருமுறைப் பாராயணம் செய்தனர். வழிபாட்டிற்குப் பிறகு சமயப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. நிலயசுவாமிகள் அவர்கள் அனைவரையும் வரவேற்று கூட்டத்தைத் தொடங்கி வைத்து இறைவழிபாட்டின் பெருமைகளை எடுத்துக் கூறினுர்கள். கூட்டத்தில் நிலைய அன்பர்கள் உரையாற்றினர்.

திரு. S. வடிவேல் பிள்ளை: பாரத்வாஜேஸ்வரர் கோயில் கல்லும் முள்ளும் நிறைந்த பகுதியாகக் கிடந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமாக இப்பொழுது எழுந்தருளியிருக்கின்ற சுவாமிகள் இக்கோயிலுக்கு வந்து உழவாரப் பணிசெய்திருக்கின்ருர்கள். அறநிலைய ஆணையர் துணைக்கொண்டு நடைபாதை முதலியன அமைத்தும், விநாயகர், முருகன், நால்வர் பெருமக்கள் உருவங்கள், சந்தானக்குரவர்கள் உருவங்கள், ஆகியவற்றை இக்கோயிலிலே அமைத்து நாம் எல்லாம் வழிபட்டு உய்ய பெருங்கருணைபுரிந்தவர்கள் மகாசந்நிதானம் அவர்களே ஆவார்கள் என்று நன்றி கூர்ந்தார். மேலும் திருவாளர்கள் A. J. ராமசாமி முதலியார், செ. சுந்தரன், த. கேசவன், N. இராசு ஏகாம்பரம் ஆகியோர் வழிபாட்டின் பெருமைகளைக் கூறித் திருமுறை ஓதுதல் சிறப்புப்பற்றிய கருத்துரைகளையும் வழங்கினுர். நன்றிகூறிய திரு. கே. ஆறுமுகம் பெரியபுராணம் உலக நலம் கருதிய நூல் என விளக்கினுர். அன்பர்கள் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

திரு. செ. சுந்தரன் : நிலையத்தொடர்பால் மாதம்தோறும் திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுகின்ற அனுபவத்தைப் பெற்றேன். திருமுறையிலேயே, எல்லா நலன்களும். மனிதனுக்கு அமைந்திருக்கிறது. அதில் இல்லாத பொருளே இல்லை. அதனை நம்பிக்கையோடு பாராயணம் செய்வோமானால் எல்லா நலன்களும்கிட்டும். அப்பர் சுவாமிகள் "நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா...... என்ற பாடலையும் திரு. சுந்தரன் பக்திப்பெருக்கோடுப்பாடி பொருள் விளக்கமும் கூறினார்கள்.

திரு. த. கேசவன்: பக்தி வழிபாடு இல்லறத்திலிருந்தே செய்வது சாலச் சிறந்தது. இதை ராமகிருஷ்ணபரமஹம்சர் விளக்குகையில் இல்லறமும் உலகியலும் பாலும் தண்ணீரும் போன்றது. நாம் அவ்வாறு பாலும் தண்ணீரும் போல் சேர்ந்திருப்போமானால் உலகியலில் ஈடுபட்டு இறைவனை அடைய முடியாமல் தவிப்போம். அவ்வாறன்றி பாலிலிருந்துகிடைக்கும் வெண்ணெயைத் தண்ணீரில் மிதக்கவிட்டால் எந்தக் கெடுதலும் வராமல் வெண்ணெயை வேண்டும்போது தண்ணீரிலிருந்து பிரித்து எடுப்பதுபோல, உலகியல் ஈடுபட்டாலும் இறைவனைப் பக்தி மார்க்கத்தால் அடையமுடியும்.

திரு. N. இராசு: தண்ணீர்ப் பஞ்சம்சென்னையில் இருக்கின்ற மக்களுக்குத் தொல்லை தருகின்றது. இத்தொல்லை நீங்கவேண்டுமானால் இறைவனை வழிபட்டு அதற்குரிய திருமுறைகளை ஓதித் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கிக்கொள்ளலாம். அதற்கு இக் கூட்டு வழிபாடு சிறந்தது.

திரு. ஏகாம்பரம்: ஆதீன அடியவர்கள் ஸ்ரீ பாரத்வாஜேஸ்வரர் கோயிலுக்குவந்து வழிபாடு செய்வது நிலம் செய்த தவமேயாகும். அது நாங்கள் செய்த தவம் இல்லை. ஸ்ரீ பாரத்வாஜேஸ்வரர் மீது பதிகம்பாடி வைத்திருக்கிறேன். அதனை மெய்யன்பர்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இறைவன் கருணையினாலே சென்னைவாழ் மக்களுக்கு மழை பொழியவேண்டும்.

ஷை அன்பர்களின் பேச்சை சுருக்கமாக எடுத்துக் கூறி, அனைவருக்கும் நன்றிகூறிய திரு. K. ஆறுமுகம்சொன்னதாவது: சைவ சமயம் பரந்த நோக்கம் கொண்டது. தான் மட்டும் தனித்து வாழ விரும்பாமல் உலகம் வாழவேண்டும் என்ற பெருநோக்குடையது. ஆகையினால்தான் பெரியபுராண ஆசிரியர் "உலகெலாம் ............... " என்று தொடங்கி உலகம் நலம் பெறுவதற்காகவே அருட்பாடல்களைப் பாடியுள்ளார்கள். சென்னைவாழ் மக்களுக்கு மட்டுமன்றி உலகமுழுமைக்கும் பருவம் தவறுமல் மழைபொழிய இறையருள்துணை செய்யும்.